Viber : 076 636 3378

பக்கங்கள் : பதினாறு

# வலம்புரி

Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

சங்கு 21 வள்ளுவர் ஆண்டு 2051 சித்திரை 22 செய்வாய்க்கிழமை (05.05.2020) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 138



கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005



இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே


### ஏனைய எதிர்க்கட்சிகள் புறக்கணிக்க

# அலரிமாளிகை விருந்தில் கூட்டமைப்பு பங்கேற்பு

## வெளிநாட்டு நிதியுதவிகள் கிடைக்கவில்லை என பிரதமர் மகிந்த புலம்பல்

(கொழும்பு)

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களை அலரிமாளிகைக்கு வருமாறு பிரதமர் மகிந்த ராஜபக்ஷ விடுத்த அழைப்பை ஐ.தே.க, ஜே.வி.பி, சஜித்தின் ஐக்கிய மக்கள் சக்தி ஆகியன புறக்கணித்த நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இக் கூட்டத்தில் கலந்துகொண்டுள்ளது. (15ஆம் பக்கம் பார்க்க)



## யாழிலுள்ள குடும்பத்தை பார்க்க முடியாது தவித்த குடும்பஸ்தர்

### விபரீத முடிவெடுத்ததில் கிளிநொச்சியில் உயிரிழப்பு

(கிளிநொச்சி)

ஊரடங்குச் சட்டம் காரணமாக யாழ்ப்பாணத்தில் இருந்து கிளிநொச்சிக்கு சென்ற குடும்பஸ்தர் தனது மனைவி பிள்ளைகளை பார்க்க முடியாத விரக்தியில் மண்ணெண்ணெய் ஊற்றி தனக்குத் தானே தீமூட்டியதில் உயிரிழந்துள்ளார். இச் சம்பவத்தில் அளவெட்டி தெற்கு பகுதியை சேர்ந்த 15

## பாராளுமன்றத்தை கூட்டாமல் அரசு சர்வாதிகாரமாக செயற்படுகின்றது

### சம்பிக்க ரணவக்க

(கொழும்பு)

பாராளுமன்றத்தை மீண்டும் கூட்டாமல் அரசாங்கம் தன்னிச்சையாக தொடர்ந்தும் முடிவெடுத்தால் இலங்கை சர்வாதிகாரம் கொண்ட நாடாக பார்க்கப்படும் என ஐக்கிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது.

இது குறித்து கருத்து தெரிவித்த அக்கட்சியின் உறுப்பினர் பாட்டாளி சம்பிக்க ரணவக்க, பாராளுமன்றம் மறுசீரமைக்கப்பட்டு அனைத்து உறுப்பினர்களுடைய ஆதரவோடு சில விடயங்களை சட்ட பூர்வமாக்கினால் மட்டுமே சர்வதேச சமூகத்தினரிடையே ஒரு சாதகமான பிம்பத்தை உருவாக்க முடியும் என கூறினார். 15

## ஓய்வூதியம் மற்றும் கொடுப்பனவுகள்

### இன்றும், நாளையும் வழங்கப்படும்

(கொழும்பு)

மே மாதத்துக்கான ஓய்வூதியம் மற்றும் உதவிக் கொடுப்பனவுகள் இன்று மற்றும் நாளை வழங்கப் படும் என்று நிதி அமைச்சு அறிவித்துள்ளது. 15

## பொதுத் தேர்தலை நடத்துவதற்கு தேர்தல் சட்டங்களை பின்பற்றுக

### தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு சட்டமா அதிபர் அறிவுரை

(கொழும்பு)

பாராளுமன்றத் தேர்தலை நடாத்துவதற்கு, சட்டத்தால் நிறுவப்பட்ட நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டியது அவசியம் என்று தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு, சட்டமா அதிபர் அறிவுரை வழங்கியுள்ளார்.

பாராளுமன்றத் தேர்தலுக்கான வேட்புமனுக்கள் பெறப் 15

## வவுனியா பம்பைமடுவில் தனிமைப்படுத்தலில் இருந்தவருக்கு

### கொரோனா தொற்று உறுதி

(வவுனியா)

வவுனியா பம்பைமடு இராணுவ முகாமில் அமைக்கப்பட்டுள்ள கொரோனா வைரஸ் தனிமைப்படுத்தல் முகாமில் தங்கவைக்கப்பட்டிருந்த ஒருவருக்கு கொரோனா வைரஸ் தொற்றிருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

வெலிசரையில் அமைந்துள்ள கடற்படை முகாமில் பணியாற்றிய 200ற்கும் மேற்பட்ட கடற்படை உத்தியோகத்தர்களுக்கு 15

## மேலும் 33 பேர் அடையாளம்

### கொரோனா 751ஆக உயர்வு

(கொழும்பு)

கொரோனா வைரஸ் (Covid-19) தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 33 பேர் நேற்று திங்கட் 15

## கொரோனா நெருக்கடியை கருத்திற்கொள்ளாது அரசு தேர்தலை நடத்த முயற்சி செய்கின்றது

### ஐ.தே.க. குற்றச்சாட்டு

(கொழும்பு)

கோவிட் -19 வைரஸ் பரவலை கட்டுப்படுத்துவதன் நோக்கத்தில் அரசாங்கம் ஊரடங்கை அமுல் படுத்தி உண்மைத் தகவல்களை மறைத்து வருவதாக தெரிவித்த ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் விஜேபால ஹெட்டியாராச்சி, வைரஸ் பரவலினால் ஏற்படும் நெருக்கடி நிலைமையை கருத்திற்கொள்ளாது தேர்தலை நடத்த அரசாங்கம் எடுக்கும் முயற்சியால் நாட்டில் பெரும் அனர்த்தம் ஏற் 15

## கொரோனா தொற்றுக்குள்ளான 72 வயது பெண் மரணம்

### உயிரிழந்தோர் எண்ணிக்கை 8 ஆக உயர்வடைந்தது

(கொழும்பு)

கொரோனா தொற்று காரணமாக 72 வயதான பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அனில் ஜாசிங்க இத் தகவலை உறுதிப்படுத்தினார்.

குருணாகல் - பொல்பித்திகம பகுதியைச் சேர்ந்த பெண் 15

### அடையாள அட்டை இறுதி இலக்க நடைமுறை

## எதிர்வரும் திங்கள் முதலே நடைமுறைக்கு வருகின்றது

### பொலிஸ் பேச்சாளர் அஜித் ரோஹன

(கொழும்பு)

ஊரடங்கு உத்தரவு அமுலில் உள்ள பகுதிகளில் தேசிய அடையாள அட்டை இறுதி இலக்க நடைமுறை அடுத்த திங்கட்கிழமை முதல் அமுலுக்கு வரும் என பொலிஸ் பேச்சாளர் அஜித் ரோஹன தெரிவித்துள்ளார். 15

# மிருசுவில் படுகொலையுடன் தொடர்புடைய மூவரும் கைதாகி மறியலில்

(சாவகச்சேரி)

மிருசுவில் மன்னன்குறிச்சி பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கொலைச் சம்பவத்துடன் தொடர்புடைய மூன்று பேரையும் எதிர்வரும் 15ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதிமன்றம் நேற்றைய தினம் உத்தரவிட்டது.

யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வரும் இருவரும் சாவகச்சேரி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வரும் ஒருவரும் சிறைச்சாலை உத்தியோகத்தர்களின் பாதுகாப்பில் சிகிச்சை பெற்று வருகின்றனர்

இறந்தவரின் சடலத்தை யாழ் போதனா வைத்தியசாலை சட்ட வைத்திய அதிகாரியின் முன்னிலையில் உடற் கூற்று பரிசோதனை செய்ய நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (ம-3,114)

# யாழ்.போதனா வைத்தியசாலையில் கொரோனா பரிசோதனை நேற்று முதல் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலையில் கொரோனா வைரஸ் தொடர்பான பி.சி.ஆர் பரிசோதனை நேற்று முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக வைத்தியசாலை பணிப்பாளர் வைத்தியர் த.சத்தியமூர்த்தி தெரிவித்தார்.

இதன்படி நேற்று வைத்தியசாலையில் கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டிருக்கலாம் என்ற சந்தேகத்தில் அனுமதிக்கப்பட்டுள்ள 5 பேர் மற்றும் வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெற்ற 9 பேருக்கு வைத்தியசாலை ஆய்வுகூடத்தில் பி.சி.ஆர் பரிசோதனை நடத்தப்படவுள்ளது. (ம-3)

# திடீரென மயங்கி விழுந்த இராணுவச் சிப்பாய் மரணம்

## தம்புள்ளையில் சம்பவம்

(தம்புள்ளை)

தம்புள்ளை பொது மலசலகூடத்திற்கருகில் மயங்கி விழுந்து இராணுவ சிப்பாய் ஒருவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

தம்புள்ளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பொது மலசலகூடத்திற்கருகில் நேற்று திங்கட்கிழமை இராணுவ சிப்பாய் ஒருவர் மயங்கி விழுந்து உயிரிழந்துள்ளதாக பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கலேவெல - பல்லேபொல பகுதியைச் சேர்ந்த துஷார குமார ஜயசிங்க எனப்படும் இராணுவ சிப்பாயே இவ்வாறு உயிரிழந்துள்ளதுடன், இவர் ஹங்வெல்ல - கொஸ்கம பகுதியில் உள்ள இராணுவ முகாமில் கடமை புரிந்துள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

சம்பவத்தின்போது, பொது மலசலகூடத்திற்கு சென்று வெளியில் வந்துள்ள சிப்பாய், திடீரென மயங்கி விழுந்துள்ளார். இதன்போது அங்கிருந்த இளைஞர்கள் சிலரும், யுவதிகளும் இணைந்து அரை மணித்தியால போராட்டத்தின் மத்தியில் தம்புள்ளை வைத்தியசாலைக்கு அழைத்துச் சென்றுள்ளனர்.

கொரோனா வைரஸ் பரவலின் காரணமாக ஏற்பட்டுள்ள நெருக்கடியான நிலைமையினால், அங்கிருந்த பலரும் தமக்கென்ன என இருந்துள்ளதுடன், விழுந்திருப்பவர் இராணுவ சிப்பாய் என்பதை அறிந்த இளைஞர்களும் யுவதிகளும் அவரை தம்புள்ளை வைத்தியசாலைக்கு அழைத்துச் சென்றதையடுத்து அவர் உயிரிழந்துள்ளார்.

உயிரிழப்புக்கான காரணம் கண்டறியப்படாத நிலையில் தம்புள்ளை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ம-3)

# கொக்குவிலில் கைக்குண்டு மீட்பு



(கொக்குவில்)

யாழ்ப்பாணம் கொக்குவில் ஆடியபாதம் வீதியில் உள்ள வெள்ளநீர் வடிகாலுக்குள் இருந்து கைக்குண்டு ஒன்று மீட்கப்பட்டுள்ளது.

குறித்த வடிகாலுக்குள் வெடிக்காத நிலையில் கைக்குண்டு இருப்பதை அவதானித்த அப்பகுதி மக்கள் இது குறித்து பொலிஸாருக்கு தகவல் வழங்கியுள்ளனர்.

இதனை அடுத்து அங்கு சென்ற இராணுவத்தினர் குறித்த கைக்குண்டை அங்கிருந்து மீட்டுச் சென்றுள்ளனர். (ம-30)

# மதுபோதையில் வாகனம் செலுத்தியவருக்கு 92 ஆயிரத்து 500 ரூபாய் தண்டம்

## யாழ்.நீதிமன்றம் அதிரடி

(யாழ்ப்பாணம்)

மதுபோதையில் மோட்டார் சைக்கிளின் ஆவணங்களின்றி சென்றவருக்கு 92 ஆயிரத்து 500 ரூபாய் தண்டம் விதித்து யாழ். நீதிமன்ற மேலதிக நீதவான் நளினி சுதாகரன் உத்தரவிட்டார்.

யாழ்ப்பாணம் மாநகரில் மதுபோதையில் வாகனம் செலுத்திய குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

இந்த நிலையில் அவரிடம் , வாகன வரி அனுமதிப்பத்திரம், காப்புறுதிப்பத்திரம் மற்றும் சாரதி அனுமதிப்பத்திரம் என்பனவும் இருக்கவில்லை.

இதனையடுத்து மதுபோதையில் வாகனம் செலுத்தியமை, சாரதி அனுமதிப் பத்திரம் இல்லாமல் வாகனம் செலுத்தியமை, காப்புறுதிப் பத்திரம் இல்லாமல் வீதியில் வாகனம் செலுத்திச் சென்றமை, வாகன வரிப் பத்திரம் இல்லாமல் வாகனத்தை எடுத்துச் சென்றமை ஆகிய நான்கு குற்றச்சாட்டுக்களின் கீழ் குறித்த நபர் நேற்று யாழ்ப்பாணம் பொலிஸாரால் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார்.

இதன்போது குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு குற்றப்பத்திரம் வாசித்துக் காண்பிக்கப்பட்ட நிலையில் அவர் தன் மீதான குற்றச்சாட்டுக்களை ஏற்று குற்றவாளி என மன்றுரைத்தார்.

தொடர்ந்து மதுபோதையில் வாகனம் செலுத்தியமைக்கு 30 ஆயிரம் ரூபாய் தண்டப்பணமும், சாரதி அனுமதிப்பத்திரம் இல்லாமல் வாகனம் செலுத்தியமைக்கு 30 ஆயிரம் ரூபாய் தண்டப்பணமும் காப்புறுதிப் பத்திரம் இல்லாமல் வீதியில் வாகனம் செலுத்திச் சென்றமைக்கு 25 ஆயிரம் ரூபாயும், வாகன வரிப் பத்திரம் இல்லாமல் வாகனத்தை எடுத்துச் சென்றமைக்கு 7 ஆயிரத்து 500 ரூபாயும் தண்டப்பணமாகச் செலுத்தவேண்டும் என மேலதிக நீதவான் நளினி சுதாகரன் உத்தரவிட்டார்.

இதனையடுத்து நான்கு குற்றங்களுக்குமாக குறித்த சந்தேகநபர் 92 ஆயிரத்து 500 ரூபாயை தண்டப் பணமாகச் செலுத்திய பினனர் அந்த நபர் விடுவிக்கப்பட்டார்.(ம-3)

# இளவாலையில் இரத்ததான முகாம்

(குப்பிழான்)

உப பொலிஸ் பரிசோதகர் அமரர் ஆ.துரைராஜசிங்கம் நினைவாக ஆருயிர் நண்பர்களால் நடத்தப்படுகின்ற மாபெரும் இரத்ததான முகாம் இன்று செவ்வாய்க்கிழமை காலை 08 மணி முதல் நண்பகல் 12.30 மணி வரை இளவாலை சித்திரமேழி பழனியானந்தன் சனசமூக நிலையத்தில் இடம்பெறவுள்ளது.

மேற்படி இரத்ததான முகாமில் ஆர்வமுள்ள அனைவரும் கலந்து கொள்ள முடியுமென ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (ம-3,18)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

கண்ணீர் அஞ்சலி
அமரர்
அருணாசலம் நவரத்தினம்

கொக்குவில் இந்துக் கல்லூரி முன்னாள் பிரதி அதிபராகவும் பௌதிகவியல் ஆசிரியருமாக பல தசாப்தங்களாக அர்ப்பணிப்புடன் கடமையாற்றிய அன்னாருக்கு எமது அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் இழப்பால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.
*அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்*
பழைய மாணவர் சங்கம்,
கொக்குவில் இந்துக் கல்லூரி, கொக்குவில்.
(C-9559)

கண்ணீர் அஞ்சலி

அமரர் கலாநிதி
முருகேசு கந்தசாமி
(ஓய்வுநிலை ஆசிரியர்)
கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவனும் கொக்குவில் இந்துக் கல்லூரியில் ஆசிரியராக பல தசாப்தங்களாக அர்ப்பணிப்புடன் கடமையாற்றிய அன்னாருக்கு எமது அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் இழப்பால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.
*அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்*
பழைய மாணவர் சங்கம்,
கொக்குவில் இந்துக் கல்லூரி, கொக்குவில்.
(C-9560)

# பாடசாலைகளை மீண்டும் ஆரம்பிக்க பொருத்தமான சூழல் அமையவில்லை

## வைத்தியர் அனில் ஜாசிங்க சுட்டிக்காட்டு




(கொழும்பு)

பாடசாலைகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கு பொருத்தமான சூழ்நிலை காணப்படவில்லை என சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அனில் ஜாசிங்க தெரிவித்தார்.

பாடசாலைகளை மீண்டும் ஆரம்பிப்பது தொடர்பான நடவடிக்கைகள் தொடர்பாக கல்வி அமைச்சின் செயலாளருக்கு வழங்கியுள்ள அறிவுறுத்தலிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அத்துடன், கொரோனா வைரஸ் பரவல் நிலைமை மற்றும் பாடசாலைகளில் மேற்கொள்ளப்படும் சுகாதார பாதுகாப்பு நடவடிக்கைகள் ஆகியன தொடர்பாக ஆராய்ந்து தீர்மானிக்கப்பட வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

முன்னதாக, எதிர்வரும் 11ஆம் திகதி நாடளாவிய ரீதியில் பாடசாலை கற்றல் நடவடிக்கைகள் ஆரம்பமாகும் என அறிவிக்கப்பட்டிருந்தது.

அத்துடன், எதிர்வரும் 11ஆம் திகதி முதல் நாட்டின் செயற்பாடுகளை வழமைக்குக் கொண்டு வர அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ள நிலையில், அதற்கான சுகாதார பாதுகாப்பு அறிவுறுத்தல்களையும் வழங்கியுள்ளது.

எனினும், பாடசாலைகளை மீள ஆரம்பிக்கும் தினம் தொடர்பிலான இறுதி முடிவு கல்வி அமைச்சால் இதுவரை அறிவிக்கப்படவில்லை.

இந்த நிலையில், எதிர்வரும் வாரங்களில் பாடசாலை சுற்றாடலில் கொரோனா பரவலை தடுக்கும் வகையிலான சுகாதார பாதுகாப்பு நடவடிக்கைகளை முன்னெடுத்தல் மற்றும் அதற்கான உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல் தொடர்பில் உரிய தரப்பினருக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்படும் என சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் சுட்டிக்காட்டினார். (ஐ)

# திருட்டுக் குற்றச்சாட்டில் கைதான மூவருக்கு 14 நாட்கள் விளக்கமறியல்



(யாழ்ப்பாணம் )

சுமார் 2 இலட்சம் ரூபாய் பெறுமதியான மோட்டர்கள் மற்றும் ஹாஸ் சிலிண்டர்களைத் திருடி விற்பனை செய்த மூவரை யாழ்ப்பாணம் பொலிஸார் கைது செய்து, நீதிமன்றில் முற்படுத்தினர்.

யாழ்ப்பாணம் தலைமைப் பொலிஸ் பொறுப்பதிகாரி பிரசாத் பெர்னாண்டோ தலைமையிலான சிறு குற்றத்தடுப்புப் பொலிஸ் அதிகாரி தலைமையிலான பொலிஸ் உத்தியோகத்தர்கள் நேற்றுமுன்தினம் இவர்களைக் கைதுசெய்தனர்.

யாழ்ப்பாணம் அரசடி பகுதியைச் சேர்ந்த 20 முதல் 25 வயதுக்கு இடைப்பட்ட நபர்களே இவ்வாறு கைதுசெய்யப்பட்டனர்.

திருடப்பட்ட பொருட்களின் உரிமையாளர்களால் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டின் பிரகாரம், யாழ்ப்பாணம் அரசடிப் பகுதியைச் சேர்ந்த இம் மூவரும் கைதுசெய்யப்பட்டனர்.

திருடப்பட்ட பொருட்களை கல்வியங்காடு மற்றும் கட்டப்பிராய் பகுதிகளுக்கு கொண்டு சென்று விற்பனை செய்தனர்.

இதேவேளை கைது செய்யப்பட்ட மூவரையும், யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றில் முற்படுத்திய போது அவர்களை 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்க நீதவான் உத்தரவிட்டார்.(இ-101)

# வடமாகாணக் கல்வித் திணைக்களத்தால் இணைய வழிக் கற்றலுக்கான தரவேற்றம்

(யாழ்ப்பாணம்)

வடமாகாணக்கல்வித் திணைக்களத்தினால் தயாரிக்கப்பட்ட க.பொ.த (உ/த) மாணவர்களுக்கான பௌதிகவியல், இரசாயனவியல், உயிரியல், உயிர் முறைமைகள் தொழில்நுட்பம், பொறியியல் தொழில்நுட்பவியல், தொழில்நுட்பவியலுக்கான விஞ்ஞானம், விவசாய விஞ்ஞானம், தமிழ், புவியியல் பாடங்களுக்கான கற்பித்தல் காணொலிகள் பின்வரும் Youtube இணைய www.youtube.com.c.Lmdmunit முகவரியினூடாகப் பார்வையிட்டுப் பயன் பெற முடியும் என்பதை வட மாகாணக் கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமார் அறிவித்துள்ளார். (இ)

# பாராளுமன்றை கூட்டக்கோரிக்கை; ஜனாதிபதி எதிர்மறையான பதில்

## கூட்டமைப்பு அதிருப்தி

(கொழும்பு)

கலைக்கப்பட்ட பாராளுமன்றத்தை மீண்டும் கூட்டுமாறு வலியுறுத்தி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினாலும் ஏனைய அரசியல் கட்சிகளினாலும் ஜனாதிபதிக்கு வேண்டுகோளொன்று விடுக்கப்பட்டது. இக்கோரிக்கைக்கான பதில் இதுவரை எதிர்மறையானதாகவே இருந்து வருகிறது.

இப்பின்னணியில், பிரதமர் கலைக்கப்பட்ட பாராளுமன்றத்தின் அனைத்து உறுப்பினர்களையும் அலரி மாளிகையில் கூட்டமொன்றிற்கு அழைத்துள்ளார்.

பின்வரும் காரணிகளின் காரணமாக நாடும் மக்களும் மிகவும் நெருக்கடியான நிலைமையில் உள்ளனர்.

அ. உலகளாவிய கொள்ளை நோய் - கொரோனாவைரஸ் - படிப்படியாக மோசமடைந்து வருகிறது. எமது நாட்டிலிருந்து அதனை முழுமையாக ஒழிப்பதற்கு இன்னும் அதிகமான வேலைகள் செய்யப்பட வேண்டும்.

பாரதூரமான விளைவுகளோடு அது மேலும் மோசமடையும் என்ற நியாயமானதோர் அச்சம் மக்கள் மத்தியில் நிலவுகிறது. இது தொடர்பாக நாட்டின் ஒன்றிணைந்த முயற்சிகள் தேவை.

ஆ. 1994 ஆம் ஆண்டிலிருந்து கடந்த இருபத்தைந்து (25) ஆண்டுகளாக ஐந்து பாராளுமன்ற மற்றும் ஜனாதிபதிப் பதவிக் காலங்களில் நடைபெற்ற அனைத்துத் தேசிய தேர்தல்களிலும் மக்கள் தமது இறைமையை-தமது வாக்குரிமையை - பிரயோகித்து 1978 ஆம் ஆண்டு அரசியலமைப்பை நிராகரித்துள்ளதோடு, அடிப்படை உரிமைகள் மற்றும் வாக்குரிமை ஆகிய தமது இறைமையின் - ஆட்சி அதிகாரங்களின் - மூன்று அம்சங்களையும் - சட்டவாக்க, நிறைவேற்று மற்றும் நீதித்துறை அதிகாரங்கள் - உள்ளடக்கி புதிய அரசியலமைப்பொன்றை நிறைவேற்றுவதற்கான ஆணையை வழங்கியுள்ளனர்.

தமது இறைமையைப் பிரயோகித்து மக்கள் வழங்கிய இவ்வாணை நிறைவேற்றப்படாததோடு, இருபத்தைந்து ஆண்டுகளுக்கு மேலாக மக்களால் நிராகரிக்கப்பட்டு வரும் ஓர் அரசியலமைப்பின் கீழேயே நாடு தொடர்ந்து ஆளப்படுகிறது.

2015 ஆம் ஆண்டு தெரிவு செய்யப்பட்ட பாராளுமன்றம் பிரதானமாக மூன்று விடயங்களைக் கையாண்டு புதிய அரசியலமைப்பொன்றைத் தயாரிப்பதற்கு ஒரு வழிநடத்தற் குழு மற்றும் பல்வேறு விடயங்களுக்குப் பொறுப்பான உப குழுக்கள் மற்றும் ஒரு வல்லுநர் குழு ஆகியவற்றோடு அரசியலமைப்புச் சபை என்ற பெயரில் தன்னை ஒரு முழு பாராளுமன்றக் குழுவாக மாற்றுவதற்கு ஒருமனதாகத் தீர்மானித்தது.

i.நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமை

ii.பாராளுமன்றத்திற்கான தேர்தல் சீர்திருத்தங்கள்

iii. தேசிய பிரச்சினையான தமிழர் பிரச்சினை - ஆட்சி அதிகாரங்களைப் பகிர்ந்து கொள்ளல்.

தாபிக்கப்பட்ட பல குழுக்களில் அனைத்து அரசியல் கட்சிகளும் பிரதிநிதித்துவம் வகித்ததால் அங்கு பெருமளவு கருத்தொருமைப்பாடு நிலவியது. குழுக்களின் அறிக்கைகள் அரசியலமைப்புச் சபையில் சமர்ப்பிக்கப்பட்டன. பாராளுமன்றம் கலைக்கப்படும் வரை இந் நடைமுறை தடைப்பட்ட போது, அது இறுதிக் கட்டத்தை அடைந்திருந்தது.

அரசியலமைப்பிற்கான 13 வது திருத்தம் நிறைவேற்றப்பட்ட பின்னர் ஆட்சி அதிகாரங்களைப் பகிர்ந்து கொள்ளும் தேசிய பிரச்சினையானது, அனைத்து அரசியல் கட்சிகளினாலும் 1991 ஆம் ஆண்டிலிருந்து அடுத்தடுத்து பதவிக்கு வந்த அரசாங்கங்களினாலும் கையாளப்பட்டு வந்துள்ளது. அதில் பெருமளவு முன்னேற்றங்கள் அடையப்பட்டுள்ளன.

இப் பிரச்சினை எவ்வாறு கையாளப்பட்டு ஏற்றுக்கொள்ளத் தக்கதொரு வழியில் எவ்வாறு தீர்த்து வைக்கப்படும் என்பது தொடர்பாக நாட்டிற்கும் சர்வதேச சமூகத்திற்கும் பகிரங்க வாக்குறுதிகள் வழங்கப்பட்டுள்ளன. அத்தகைய வாக்குறுதிகளின் அடிப்படையில் சர்வதேச சமூகத்தின் ஆதரவு பெற்றுக்கொள்ளப்பட்டது.

தேசிய சமாதானத்தின் நலனிற்காகவும், பிராந்திய அமைதியின் நலனிற்காகவும் உலக சமாதானத்தின் நலனிற்காகவும் இவ் வாக்குறுதிகள் காப்பாற்றப்பட வேண்டும். இல்லையேல், பாதிக்கப்பட்டவர்களான தமிழ் மக்களுக்குத் துரோகமிழைப்பதற்காக சர்வதேசச் சமூகமும் ஏமாற்றப்பட்டதாகவே தோன்றும்.

ஈ. நாடு எதிர்நோக்கும் மோசமுறும் பொருளாதார நெருக்கடி.


மேலே விபரிக்கப்பட்ட விடயங்கள் அனைத்தும் தீர்த்துவைக்கப்பட வேண்டும் என்பதனாலும், நாட்டின் நலனுக்காகவும் அதன் மக்களின் நலனுக்காகவும் இவ் விடயங்கள் அனைத்தையும் நியாயமானதும் ஏற்றுக் கொள்ளத்தக்கதுமான ஒருமுறையில் தீர்த்துவைப்பதற்கு எமது ஆதரவை வழங்க நாம் தயாராக உள்ளோம் என்பதைத்தெளிவாக எடுத்துக்காட்டுவதற்காகவும் பிரதமருடனான இச் சந்திப்பில் கலந்து கொள்ளவேண்டும் என்று நாங்கள் தீர்மானித்துள்ளோம்.

எனினும், நீங்கள் அழைப்பு விடுத்திருக்கும் இக்கூட்டம் பாராளுமன்றத்தைக் கூட்டுவதற்கான ஒரு மாற்றீடாக அமையாது, அமையவும் முடியாது என்பதை நாம் அழுத்தம் திருத்தமாக அறிவிக்க விரும்புகிறோம்.

எமது கூட்டறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு, தற்போது தோன்றியுள்ள பல அரசியலமைப்பு மற்றும் சட்டப் பிரச்சினைகளைக் கையாளுவதற்காக பாராளுமன்றம் கூட்டப்படவேண்டும் என்றும் பாராளுமன்றத்தால் மட்டுமே அவற்றைக் கையாள முடியும் என்றும் நாம் உறுதியான கருத்தினை கொண்டிருக்கிறோம்.

ஆர்.சம்பந்தன் - (தலைவர், தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு), மாவை. சேனாதிராஜா - (தலைவர், இலங்கைத் தமிழரசுக் கட்சி), செல்வம் அடைக்கலநாதன் - (தலைவர்.தமிழீழ விடுதலை இயக்கம்), தர்மலிங்கம் சித்தார்த்தன் - (தலைவர், தமிழீழ மக்கள் விடுதலை இயக்கம்) ஆகியோர் இணைந்து விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# மதுபான விற்பனை நிலையம் உடைப்பு




(திம்புள்ள)

திம்புள்ள பத்தனை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கொட்டகலை நகரிலுள்ள மதுபான விற்பனை நிலையம் உடைக்கப்பட்டுள்ளதாக திம்புள்ள பத்தனை பொலிஸார் தெரிவித்தனர்.

கொட்டகலை நகரிலுள்ள பொலிஸ் சோதனைச் சாவடிக்கு 100 மீற்றர் தொலைவிலுள்ள மதுபான விற்பனை நிலையமே நேற்று முன்தினம் இரவு இனம் தெரியாதோரால் உடைக்கப்பட்டது.

மதுபான விற்பனை நிலையம் உடைக்கப்பட்டுள்ளமை தொடர்பில் உரிமையாளரின் முறைப்பாட்டுக்கமைய பொலிஸார் விசாரணையை முன்னெடுத்து வருகின்றனர். (ஐ)

# நீதிமன்ற வளாகத்தில் அதிகளவில் கூடிய மக்கள்
# சமூக இடைவெளியைப் பேணுவதில் சிக்கல்!





(ஏறாவூர்)

மட்டக்களப்பு மாவட்டம் உள்ளிட்ட ஊரடங்கு சட்டம் தளர்த்தப்பட்ட 21 மாவட்டங்களில் இயல்பு நிலை திரும்பியுள்ளதுடன் மக்களின் நடமாட்டம் அதிகளவில் காணப்பட்டது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் நேற்று திங்கட்கிழமை காலை தொடக்கம் ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்பட்டதைத் தொடர்ந்து மக்கள் சுகாதார நடைமுறையைக் கடைப்பிடிக்கும் வகையில் தமது செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றனர்.


குறிப்பாக நேற்று வர்த்தக நிலையங்களில் சனக்கூட்டம் குறைந்த அளவிலேயே காணப்பட்டது. அத்துடன் சுகாதார நடைமுறைகளைப் பேணிய வகையில் மக்கள் தமது அன்றாட கடமைகளை நிறைவேற்றினர்.

பொலிஸாரும் படையினரும் விசேட சோதனை நடவடிக்கைகளில் ஈடுபட்டதுடன் சுகாதார நடைமுறைகள் குறித்து மக்களுக்கு தெளிவுபடுத்தியதுடன் முகக்கவசம் அணியாதவர்களுக்கு அதனை அணியவைக்கும்நடவடிக்கையையும் முன்னெடுத்தனர்.

இதேநேரம் நேற்று நீதிமன்ற நடவடிக்கைகள் ஆரம்பமான நிலையில் அங்கு பெருமளவு மக்கள் கூடியதனால் சமூக இடைவெளியைப் பேணுவதில் சிக்கல் நிலைமை ஏற்பட்டிருந்தது.

குறிப்பாக நீதிமன்ற நடவடிக்கைக்காக மட்டக்களப்பு மாவட்டத்தின் பல பகுதிகளிலும் இருந்து பெருமளவானோர் கூடியிருந்தனர். இந்நிலையில் வெளியில் அனைவரும் நிறுத்தப்பட்டு வழக்குகளுக்காக அழைக்கும் நிலை ஏற்பட்டது. (இ-7)

## மக்கள் நலன் வேண்டி நோய் தீர்க்கும் தன்வந்தரி பகவான் ஆராதனை



(யாழ்ப்பாணம்)

மக்களை கொடிய நோய்களிலிருந்து காப்பதற்காக திருப்பாற்கடலில் தோன்றியவர் ஸ்ரீ தன்வந்தரி பகவான் ஆவார். உலகின் முதல் மருத்துவராகப் போற்றப்படும் இவர் ஸ்ரீ மஹா விஷ்ணு பகவானின் அவதாரமாவார்.

இவரை தினம்தோறும் வழிபாடு செய்வதன் மூலம் ஏற்படுகின்ற கொடிய நோய்களிலிருந்து விடுபட்டு ஆனந்தமாக வாழலாம். அந்த வகையில் கட்டுப்படுத்த முடியாமல் பெருகிவரும் கொரோனாத் தொற்றிலிருந்து மக்களை காத்தருள் புரிவதற்காக "சண்டிலிப்பாய் ஸ்ரீ சரஸ்வதி அம்பாள் உபதேச திருக்கோவிலில்" எழுந்தருளி இருக்கும் ஸ்ரீ தன்வந்தரி பகவானுக்கு தினம்தோறும் விசேட பிரார்த்தனைகள் நடைபெற்றவண்ணம் இருக்கின்றன. கடந்த ஏகாதசி விரத புண்ணியதினத்தில் (03.05.2020 ஞாயிற்றுக்கிழமை) விசேட அபிஷேக ஆராதனை நடைபெற்றது.

இப் பிரார்த்தனைகளை வீணாகான குருமுதல்வர் சிவஸ்ரீ. சபா.வாசுதேவக் குருக்கள் நடத்தி வருகின்றார்.(இ-7)

## விற்பனைக்காக வைக்கப்பட்ட விறகிற்கு தீ வைத்த விசமிகள்



(கரணவாய்)

விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்த சுமார் இரண்டு இலட்சம் ரூபாய் பெறுமதியான விறகு விசமிகளால் எரித்து நாசமாக்கப்பட்டது.

கனகம்புளியடிக்கு அண்மையில் சாவகச்சேரிக்கு செல்லும் வழியிலுள்ள வயல் வெளிப்பகுதியில் வைக்கப்பட்டிருந்த விறகே இவ்வாறு தீக்கிரையாக்கப்பட்டது.

இது தொடர்பாக உரிமையாளரால் சாவகச்சேரிப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டதையடுத்து பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ-5-60)

## நினைவுச் சின்னங்கள் சேதம் ஐவர் கைது!

(யாழ்ப்பாணம்)

நவாலி அமெரிக்கன் சிலோன் மிசன் திருச்சபைக்குச் சொந்தமான சேமக்காலையிலுள்ள நினைவுச்சின்னங்கள் சேதமாக்கப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய 5 பேர் மானிப்பாய் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

கடந்த வெள்ளிக்கிழமை மாலை இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பாக மானிப்பாய் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர்.

இதன்போது, கும்பல் ஒன்று குறித்த சேமக்காலையில் வைத்து கள் குடித்துவிட்டு நினைவுச்சின்னங்களைக் சேதப்படுத்தியதாக விசாரணைகளில் தெரியவந்தது.

இந்நிலையில் குறித்த கும்பலைச் சேர்ந்த 5 பேர் நேற்று முன்தினம் இரவு மானிப்பாய் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் ஐவரும் மல்லாகம் நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர் என பொலிஸார் தெரிவித்தனர். (இ-4-7)

## வேட்புமனு செல்லுபடித்தன்மை குறித்து மீண்டும் கூடி கலந்துரையாட தேர்தல்கள் ஆணைக்குழு முடிவு

(கொழும்பு)

வேட்பு மனுக்களின் செல்லுபடித் தன்மை குறித்து தற்போது சர்ச்சை ஏற்பட்டுள்ள நிலையில் எதிர்வரும் 12ஆம் திகதி தேர்தல்கள் ஆணைக்குழு மீண்டும் கூடி கலந்துரையாடவுள்ளது.

இது குறித்து ஆங்கில ஊடகம் ஒன்றுக்குக் கருத்து வெளியிட்ட தேர்தல்கள் ஆணைக்குழு உறுப்பினர் பேராசிரியர் ரட்ணஜீவன் ஹூல், ஆணைக்குழு வழக்கம் போல் தேர்தலுக்குத் தயாராகி வருகிறது எனக் கூறினார்.

மேலும் மார்ச் மாதத்தில் பொது விடுமுறை நாட்களில் ஏற்றுக்கொள்ளப்பட்ட வேட்பு மனுக்களின் செல்லுபடித் தன்மை குறித்து சட்டமா அதிபரின் கருத்தை கோருவதற்கு தேர்தல்கள் ஆணைக்குழு முடிவு செய்துள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

ஒரு அரசியல் கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தும் பிரதிநிதி எழுப்பிய சந்தேகங்களின் பின்னரே சட்டமா அதிபரின் கருத்தை பெற ஆணைக்குழு தீர்மானித்தது.

கொரோனா வைரஸ் மேலும் பரவாமல் தடுக்க பொது நிர்வாக அமைச்சர், விசேட வர்த்தமானி அறிவிப்பில், 17, 18 மற்றும் மார்ச் 19 ஆகிய மூன்று நாட்களை விசேட பொது விடுமுறைகள் என அறிவித்திருந்தார்.

இதற்கிடையில், கொரோனா வைரஸ் தொற்றுநோய்க்கு மத்தியில் பொதுத் தேர்தலை நடத்துவதற்கு எதிராக இடைக்கால தடை உத்தரவு கோரி உயர் நீதிமன்றில் அடிப்படை உரிமைகள் மீறல் மனுத்தாக்கல் செய்யப்பட்டது.

அதில் ஜூன் 20 ஆம் திகதி பொதுத் தேர்தலை நடத்துவதாக தேர்தல்கள் ஆணைக்குழு வெளியிட்ட வர்த்தமானி அறிவிப்பு அரசியலமைப்பிற்கு விரோதமானது என்றும், வர்த்தமானி அறிவிப்பை செல்லாது என்றும் உத்தரவிடக்கோரி தாக்கல் செய்யப்பட்டது.

இருப்பினும் வேட்பாளர்களுக்கு விருப்பு எண்ணை வழங்குவது மற்றும் ஜூன் 20 ஆம் திகதி அன்று தேர்தலை நடத்துவது நீதிமன்றத்தின் முடிவைப் பொறுத்தது என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## விடுமுறை தினங்களில் வேட்புமனுத்தாக்கல் அரசமைப்பு ரீதியாக எந்தச்சிக்கலும் இல்லை

### எதிர்க்கட்சியினர் மீது கம்மன்பில காட்டம்



(கொழும்பு)

விடுமுறை தினங்களில், வேட்புமனுக்கள் தாக்கல் செய்யப்பட்டமைக்கு அரசமைப்பு ரீதியாக எந்தவொரு சிக்கலும் கிடையாது என ஆளும் தரப்பு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்."மார்ச் 17 ஆம் திகதியிலிருந்து 19ஆம் திகதி வரை விசேட அரச விடுமுறை தினமாக அறிவிக்கப்பட்டிருந்தது.

வேட்புமனுத் தாக்கல் செய்வதற்கான காலவரையறையில், 4 நாட்கள் விடுமுறை தினமாக இருப்பதால், இதுதொடர்பாக சட்டமா அதிபரின் வியாக்கியானத்தை தேர்தல்கள் ஆணைக்குழு கோரியது.

ஜனாதிபதி நாடாளுமன்றைக் கலைக்கும்போது, தெரிவிக்கப்பட்ட காரணங்கள் நாடாளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தில் 10 ஆம் அதிகாரம் 2 ஆம் உறுப்புரையில் தெளிவாகச் சுட்டிக்காட்டப்பட்டது. அந்தவகையில், வேட்புமனுத் தாக்கல் செய்வதற்கான காலப்பகுதி மற்றும் வாக்கெடுப்பை நடத்தும் தினம் தொடர்பாக குறிப்பிடப்பட்டது.

அத்தோடு, அந்தச் சட்டத்தின் 10 ஆவது சரத்தின் முதலாவது ரோம இலக்க உறுப்புரிமைக்கு இணங்க, பௌர்ணமி அல்லது அரச விடுமுறை தினங்களில் வாக்கெடுப்பை நடத்த முடியாது என்றும் தெரிவிக்கப்பட்டது.

அப்படியானால், இவ்வாறான தினங்களில் பொதுத் தேர்தலை நடத்த முடியாதே ஒழிய, வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்ய முடியாது என்று குறிப்பிடப்படவில்லை. இதன் ஊடாக வேட்பு மனுத் தாக்கல் தொடர்பாக தெளிவான நிலைப்பாட்டுக்கு வரமுடியும்" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# இராசிபலன்

05.05.2020
சித்திரை 22, செவ்வாய்க்கிழமை
திரயோதசி:- முன்னிரவு 9.48 மணிவரை
அத்தம் பிற்பகல் 2.51 மணிவரை
சுபநேரம்:- 10.26-11.56 மணிவரை
இராகுகாலம்:- 2.56-4.26 மணிவரை
சந்திராஷ்டமம்:- பூரட்டாதி, உத்திரட்டாதி
பிரதோச விரதம்


மேஷம்
ஆரோக்கியத்தில் முன்னேற்றம் காண்பீர்கள், கடன்களை வசூலிக்க எடுத்த முயற்சிகள் கைகூடும், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், போசன சுகமுண்டு.


ரிஷபம்
பிள்ளைகளின் நீண்ட நாளைய கோரிக்கையை நிறைவேற்றுவீர்கள், வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், அருமையான நாள், பூர்வீகச் சொத்துக்களால் ஆதாயமுண்டு.


மிதுனம்
தொலைபேசி வழியில் பொன்னான தகவல்கள் வந்து சேரலாம், வியாபாரத்தை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், பொதுவாழ்வில் புகழ் கூடும்.


கடகம்
கனிவாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள், வியாபார விருத்திக்கு வித்திடுவீர்கள், பொதுநல ஈடுபாட்டில் புகழ் பெறுவீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.


சிம்மம்
குடும்பத்தில் குதூகலம் கூடும், இறைவழிபாட்டில் ஆர்வம் கூடும், சான்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம், பேச்சில் இனிமை தென்படும், புதிய பொருட்களை வாங்கும் வாய்ப்புண்டு.


கன்னி
கோரிக்கைகள் நிறைவேற கோயிலுக்குச் செல்ல வேண்டிய நாள், பணத்தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும், தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம்.


துலாம்
ஒரு சில வேலைகளுக்காக சற்று அலையும் சூழ்நிலை ஏற்படலாம், புண்ணிய காரியங்களுக்காக சிறிது செலவிட்டு மகிழ்வீர்கள், மாற்றங்களால் ஏற்றம் பெறுவீர்கள்.


விருச்சிகம்
குடும்ப ஒற்றுமை கூடும், கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள், விருந்தினர்களின் சந்திப்புண்டு, கௌரவமான நாள்.


தனுசு
வாழ்க்கைத்தரம் உயர வழிவகை செய்வீர்கள், செய்தொழிலை விருத்தி செய்யும் எண்ணம் உருவாகும், வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், ஆரோக்கியமான நாள்.


மகரம்
போட்டியாகச் செயற்பட்டவர்கள் மனம் மாறுவர், புதிய திட்டங்கள் கைகூடும், உடல் நலன் சீராகும், பயணங்களால் பலனுண்டு, வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.


கும்பம்
எதிர்பாராத மனஸ்தாபங்கள் ஏற்படலாம், விரயங்கள் கூடும் நாள், குடும்பத்தினர்களிடம் கோபத்தைக் குறைத்துக் கொள்வது நல்லது, வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.


மீனம்
வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ள முற்படுவீர்கள், சென்ற இடத்தில் செல்வாக்கு மேலோங்கும் நாள், காரிய அனுகூலமுண்டு, வருமானம் திருப்திதரும் வகையில் அமையும்.

மிக நல்லதே நடக்கும் என நம்புவோம்

## சஹ்ரானுக்குப் போதனை

# கைது செய்யப்பட்டவரிடம் 4ஆம் மாடியில் விசாரணை

(கொழும்பு)

இலங்கையில் 8 இடங்களில் கடந்த வருடம், உயிர்த்த ஞாயிறு தினத்தன்று இடம்பெற்ற தொடர் தற்கொலைக் குண்டுத் தாக்குதல்களுடன் புத்தளம் பிரதேசத்தின் அமைப்பொன்றும் தொடர்புபட்டுள்ளமை தொடர்பில் சி.ஐ.டி. தகவல்களை வெளிப்படுத்திக் கொண்டிருந்த நிலையில் அதன் பொறுப்பாளராக செயற்பட்ட நபர் கைது செய்யப்பட்டார்.

நேற்று முன்தினம் மாலை புத்தளம் - கற்பிட்டி, 4 ஆம் குறுக்குத்தெரு பகுதிக்குச் சென்ற சி.ஐ.டியின் சிறப்புக் குழுவினர் குறித்த நபரை அவரது வதிவிடத்தில் வைத்து பயங்கரவாதத்தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்ததாகவும் கைது செய்யப்பட்ட நபர் சி.ஐ.டி தலைமையகமான 4 ஆம் மாடிக்கு அழைத்துச் செல்லப்பட்டு விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பொலிஸ் அத்தியட்சகர் ஜாலிய சேனாரட்ன கூறினார்.



குறித்த நபர் அரச சார்பற்ற நிறுவனம் ஒன்றை நடத்தி வந்த நிலையில், அதன் நிதி ஊடாக அடிப்படைவாதத்தைப் போதனை செய்ய பயிற்சி நெறிகளை முன்னெடுத்துள்ளதாகவும் அதற்காக உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல்களை நடத்திய குண்டுதாரிகள் வந்து சென்றுள்ளமையும் விசாரணைகளில் வெளிப்படுத்தப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் அத்தியட்சகர் ஜாலிய சேனாரட்ன கூறினார்.

அவ்வாறு நடத்தப்பட்ட பயிற்சி நெறிகளின் போது பயிற்சி நெறிகளுக்குப் பொறுப்பாளராகவும் குறித்த நபரே செயற்பட்டுள்ளதாகவும் சி.ஐ.டி. தெரிவித்தது.

புத்தளம், மதுரங்குளி, அசார் நகரை மையப்படுத்தி இயங்கியதாகக் கூறப்படும் மேற்படி அரச சார்பற்ற நிறுவனம் தொடர்பில் வெளிப்படுத்தப்பட்ட தகவல்களுக்கு அமைய இந்தக் கைது நடவடிக்கை இடம்பெற்றது.

இந்த அரச சார்பற்ற நிறுவனத்தின் பொறுப்பாளரால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள அடிப்படை வாத போதனை முகாம்களில், பயங்கரவாதி சஹ்ரான், சங்ரில்லா ஹோட்டல் தற்கொலை குண்டுதாரி மொஹம்மட் இப்ராஹீம் இன்சாப் அஹமட் மற்றும் சினமன் கிராண்ட் ஹோட்டல் தற்கொலைதாரி மொஹம்மட் இப்ராஹீம் இல்ஹாம் அஹமட் ஆகியோர் வளவாளர்களாக கலந்துகொண்டதாக விசாரணைகளில் தெரிய வந்தது.

இந்நிலையில் இது குறித்த மேலதிக விசாரணைகள் சி.ஐ.டி. பிரதிப் பொலிஸ்மா அதிபர் நுவான் வெதிசிங்கவின் கீழ் இடம்பெற்று வருகின்றன. (இ-7)

# அதிவேக வீதி நிர்மாணப் பணிகளுக்காக கடன்பெற அமைச்சரவை அங்கீகாரம்

## அமைச்சர் பந்துல தகவல்



(கொழும்பு)

அதிவேக வீதி நிர்மாணப் பணிகளுக்காக 3,170 கோடி ரூபாய் கடன் பெறுவதற்கு பெருந்தெருக்கள் அமைச்சிற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியது.

உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு கடன் இதற்காகப் பெறப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில் அதிவேக வீதி தொடர்பாக விடயத்திற்கு பொறுப்பான அமைச்சர் என்ற வகையில், அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவிடம் ஊடகங்களுக்குத் தெளிவூட்டுமாறு வேண்டுகோள் விடுப்பதாக அமைச்சரவை இணைப் பேச்சாளர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

அமைச்சரவை இவ்வாறு அங்கீகாரம் வழங்கியுள்ளமை குறித்து எதிர்க்கட்சியினர் கடும் விமர்சனங்களை முன்வைத்து வரும் நிலையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

# சமூக இடைவெளியை உறுதி செய்வது மாகாண அதிகாரிகளின் பொறுப்பு -அமரவீர

(கொழும்பு)

பொதுப் போக்குவரத்தில் சமூக இடைவெளி நடைமுறையை பின்பற்றுவதை உறுதி செய்வது மாகாண அதிகாரிகளின் பொறுப்பு என்று அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்தார்.

தனியார் பேருந்துகள் சமூக இடைவெளி நெறிமுறைகளைப் பின்பற்றவில்லை என்ற செய்திகள் தொடர்பாக கருத்து தெரிவித்த போக்குவரத்து அமைச்சர் அமரவீர இது மத்திய அரசின் கடமையல்ல எனக் கூறினார்.

"சமூக இடைவெளிகள் உட்பட சுகாதார அதிகாரிகளால் வழங்கப்பட்ட சுகாதார வழிகாட்டுதல்களை தனியார் துறையினரும் பின்பற்றுகின்றனர் என்பதை மாகாண சபைகள் உறுதி செய்ய வேண்டும்" என்று அமைச்சர் கூறினார்.

மேலும் அரச பேருந்துகள் மற்றும் புகையிரத சேவைகளில் அத்தியாவசிய சேவையின் நிமித்தம் செல்லும் ஊழியர்களை மட்டுமே கொண்டு செல்ல அனுமதிக்கப்படுகின்றன.



மேலும் அதில் சுகாதார மற்றும் பாதுகாப்பு நெறிமுறைகளைக் கண்டிப்பாக பின்பற்றுகின்றன என்றும் அவர் கூறினார். (இ-7)

# கடற்படை வீரர்கள் 324 பேருக்கு இதுவரை கொரோனா தொற்று

(கொழும்பு)

இலங்கையில், இதுவரை 324 கடற்படை வீரர்களுக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டதாக இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவித்தார்.

இந்நிலையில், இதுவரை இலங்கையில் கொரோனாத் தொற்றுக்குள்ளான 718 பேரில் 324 பேர் கடற்படை வீரர்கள் ஆவர்.

நேற்று முன்தினம் அடையாளம் காணப்பட்ட 13 பேரில் வெலிசர கடற்படை முகாமை சேர்ந்த 11 கடற்படை வீரர்களும் அவர்களுடன் நெருங்கிப் பழகிய இருவரும் அடையாளம் காணப்பட்டனர். (இ-7)

# கொரோனா பெருந்தொற்றிலிருந்து தற்காத்துக் கொள்ளும் முறைகள்

(நேற்றைய தொடர்ச்சி...)

### உணவகங்களை பயன்படுத்துவோரின் பாதுகாப்பை உறுதி செய்தல்:

அங்கீகரிக்கப்பட்ட முகக்கவசங்களை அணிதல் மற்றும் போதுமான சமூக இடைவெளிகளைப் பேணல் (1m-2m) என்பன கட்டாயமானவை ஆகும். உள்நுழையும் முன் கைகழுவும் திரவத்தைப் பயன்படுத்தித் தொற்று நீக்கம் செய்வது அவசியமானது. வாடிக்கையாளர்கள் தேவையற்ற பொருட்களுடன் விருந்தகங்களுக்குள் நுழைவதைத் தவிர்க்க வேண்டும் (உதாரணமாக, தலைக்கவசங்கள் / பொதிகள் என்பவற்றை உணவு உண்ணும் மேசை வரை எடுத்துச்செல்வதை முற்றாகத் தவிர்க்க வேண்டும்).

### உணவகங்களின் சுகாதாரப் பாதுகாப்பு:

நாளாந்தத்தொற்று நீக்கல் நடவடிக்கைகள் அவசியமானவை. அதிக தொடுகைகள் ஏற்படும் நுழைவாயில் கதவுகள், உணவு உண்ணும் மேசைகள், நீர்க் குழாய்கள் என்பனவற்றை ஆவர்த்தன ஒழுங்கில் முறையாக தொற்று நீக்கம் செய்ய வேண்டும். உணவு விடுதியினுள் சுகாதாரமான காற்றோட்டத்தை உறுதி செய்ய வேண்டும். உணவைப் பரிமாறும் போது வாழையிலைகளைப் பயன்படுத்துவது பாதுகாப்பானது.

### உணவகங்களில் தொற்று நீக்கலை மேற்கொள்ளும்போது பின்வருவன பற்றி கவனம் செலுத்திடுங்கள்:

- அங்கீகரிக்கப்பட்ட நச்சுத்தன்மையற்ற தொற்று நீக்கிகள் / கைகழுவும் திரவங்களை மாத்திரம் பயன்படுத்தல்.
- சுத்திகரிக்கும் உபகரணத்துடன் உணவு தொடுகையுறாமல் இருத்தல்.
- சுத்திகரிக்கும் கருவிகளை பிரத்தியேகமாகப் பயன்படுத்தல் (உணவு தயாரிக்குமிடம் உணவு பரிமாறும் இடம், உணவு மேசை என்பவற்றுக்கான தனியான சுத்திகரிக்கும் கருவிகள்).
- உணவுகளை வைத்துக்கொண்டு ஒருபோதும் இராசாயனத் தொற்று நீக்கலை மேற்கொள்ளக் கூடாது.
- தொற்று நீக்கல் அல்லது சுத்திகரிப்பைச் செய்யும் பணியாளர் பொருத்தமான பாதுகாப்புக் கவசங்களை அணிதல் (முகக் கவசம், கையுறை, மேலங்கி மற்றும் காலணி).
- உணவகங்களில் தொற்று நீக்கியை விசிறுவதைத் தவிர்த்து தொற்று நீக்கியை மேசை துடைப்பம் அல்லது சுத்தமான துணி மூலம் பூசி துடைப்பது சிறந்தது (விசுறுவதால் தொற்று நீக்கி உணவுடன் கலப்பதற்கான சாத்தியக்கூறு உண்டு).

உணவகம் ஒன்றில் பாதுகாப்பான உணவுப் பரிமாற்றம் ஒன்றை எவ்வாறு செய்யலாம்? இதற்குத் தேநீர் பரிமாறும் சந்தர்ப்பம் ஒன்றைக் கருதுவோம்.

- தேநீர் தயாரிக்கப்பயன்படும் சகல பாத்திரங்களும் கழுவும் திரவத்தால் சுத்தம் செய்யப்பட வேண்டும்.
- தேநீர்க்கோப்பைகளை குறைந்தது ஒரு நிமிடம் கழுவும் திரவத்தால் தொற்று நீக்கிக் கழுவ வேண்டும்.
- தேநீர்க் கோப்பைகளை சுத்தம் செய்யும் இடம் மற்றும் தேநீர் தயாரிக்கும் இடம் என்பன தனித்தனியாக அமைய வேண்டும்.
- சுத்தம் செய்வதற்கும் தேநீர் தயார் செய்யவும் மற்றும் பரிமாறவும் தனியாகப் பணியாளர்களை அமர்த்திட வேண்டும்.
- தேநீர் நிரப்பப்பட்ட கோப்பையை தொற்று நீக்கம் செய்யப்பட்ட தட்டில் பரிமாற வேண்டும் (தேநீர்க் கோப்பையை பரிமாறுபவர் நேரடியாகத் தொடுவதை தவிர்ப்பதற்காக).
- பயன்படுத்தப்பட்ட தேநீர் பரிமாறும் கோப்பைகளை உடன் அகற்றி தொற்று நீக்கிக் கழுவ வேண்டும்.
- எந்தவொரு பணியாளருக்கும் தனிநபர் பாதுகாப்பு அம்சங்கள் அவசியமானவை (முகக்கவசம், மேலங்கி, தலையங்கி மற்றும் கையுறைகள்).
- சவர்க்காரம் உபயோகித்து கைகழுவுதல் ஒருமுறை பாவிக்கும் கையுறைகள் (single use gloves) அணிவதை விட மிகவும் பாதுகாப்பானது.





### 05. வீட்டில் பாதுகாப்பான உணவுத்தயாரிப்பும் பரிமாறலும்

குறைந்த உணவு மைல் (Food Mile) கொண்ட உணவுகள் சிறந்த சுகாதாரப் பாதுகாப்பைக் கொண்டவை. அதாவது உங்கள் வீட்டுத்தோட்டக் காய் கறிகள் மற்றும் பயிர் வகைகள் பாதுகாப்பானவை ஆகும்.

கொள்வனவு செய்யும் மரக்கறிகள் / இறைச்சி வகைகளை பாதுகாப்பாக சுத்தம் செய்வது முக்கியமான விடயமாகும். கொள்வனவு நடவடிக்கைகளைத் திட்டமிட்டு மேற்கொள்ளுங்கள். அதிகம் பயணிப்பதையும் சன நெரிசலான பகுதிகளில் கொள்வனவு செய்வதையும் தவிருங்கள். பொருட்களை வாங்கும் போது அடிக்கடி கைகளைத் தூய்மைப்படுத்துங்கள். மற்றும் வைரஸ் உடலினுள் பரவும் அபாயத்தைக் குறைக்க முகத்தைத் தொடுவதைத் தவிர்க்கவும். நீங்கள் வியாபார நிலையத்தில் இருந்து வீட்டிற்கு வரும் போது, வாங்கிய உணவுப்பொருளை முன்கூட்டியே கழுவி, வீட்டில் சுத்தமாக உள்ள ஒரு பிளாஸ்டிக் சேமிப்பு பையில் அல்லது பெட்டியில் மாற்றுவது நல்லது.

பொருட்கள் கொண்டு வந்த பைகளையும் மற்றும் தனிப்பட்ட பொதிகளைக் கொண்ட பெட்டிகளை காலியாக்கி குப்பைத் தொட்டியில் வீசலாம். தொற்று நீக்கி கொண்ட துடைப்பால் உணவு பொதி செய்யப்பட்ட பிளாஸ்டிக், உலோக அல்லது கண்ணாடிக் கொள்கலனைத் தொற்று நீக்கலாம்.

கடையில் வாங்கிய பழங்கள் மற்றும் காய்கறிகளை சமைக்க முன் 24-72 மணி நேரம் ஒரு தனியான இடத்தில் வைத்திருக்கலாம் (வீட்டிற்கு வெளியே உள்ள கொட்டகையில்). அழுகிய அல்லது சேதமடைந்த பகுதிகளை வெட்டிய பின்னர் பழங்கள் மற்றும் காய்கறிகளை சவர்க்காரம் அல்லது அதற்கு ஈடான மற்றைய வணிக கழுவும் திரவம் எதுவும் இல்லாமல் ஓடும் நீரின் கீழ் அலசலாம்.

தடித்த தோலைக்கொண்ட பழங்களை மற்றும் காய்கறிகளை உறுதியான தூரிகையினால் சுரண்டி ஓடும் நீரில் அலசலாம். நீரில் அலசிய பின்பு பழங்களையும் மற்றும் காய்கறிகளையும் சுத்தமான கடதாசி அல்லது சுத்தமான துண்டினால் துடைக்கலாம்.

இன்று நிலவும் பெருந்தொற்றுச் சூழலில் பாதுகாப்பான உணவை வீட்டில் பரிமாறுவது பற்றி யுனிசெவ் (UNICEF) பின்வரும் விடயங்களைக் குறிப்பிடுகின்றது.

- புதிய மரக்கறிகள், இலை வகைகள் மற்றும் பழங்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுங்கள் (உதாரணமாக வீட்டில் இருந்து பெறக்கூடிய அகத்தி, தூதுவளை, கீரை, பசளி, முருங்கை இலை, வாழைப்பூ, மா, பலா, வாழை போன்ற கனி வகைகள் ஆகியன போசாக்கு பெறுமதி மிகுந்தவை).
- உடன் மரக்கறிகள் கிடைக்காத போது ஆரோக்கியமான உலர் உணவுகளைப்பயன்படுத்துங்கள்.
- அதிகம் பதப்படுத்தப்பட்ட உணவுகளைத் தவிருங்கள்.
- கர்ப்பிணிப் பெண்கள், பாலூட்டும் தாய்மார்கள், சிறுவர்கள் மற்றும் முதியவர்களின் போசணை நலனில் அதிக கவனம் செலுத்துங்கள்.
- முக்கியமாக ஆரோக்கியமான சமைத்த உணவுகளை குடும்ப உறுப்பினர்களுடன் ஒன்றாக இணைந்து பரிமாறி உண்ணுங்கள்.

COVID-19 பெருந்தொற்று சவாலானதொரு சூழலை உருவாக்கியுள்ளது. உணவத்தேவைகளும் அதிகரித்த வண்ணம் உள்ளன. இருப்பினும் பல நாடுகளில் உற்பத்தி நெருக்கடியான சூழலைச் சந்திக்கின்றது. உலக உணவுத் திட்டம் (World Food Programme – WFP) எதிர்வரும் காலங்களில் உணவுப்பற்றாக்குறை நிலவும் என்று எதிர்வு கூறியுள்ளது.

இன்று பாதுகாப்பான முறையில் நமது உணவுத்தேவையை நிறைவேற்ற வேண்டிய சூழலில் உணவு வளங்களை வீண் விரயம் செய்யாமல் இருப்பதன் அவசியத்தையும் நாம் உணர வேண்டும். அதேநேரத்தில் உணவு விநியோகச் சங்கிலியை உயிர்த் துடிப்புடன் வைத்திருத்தல் இன்றியமையாததாகின்றது!

COVID-19 பெருந்தொற்று, பசி - பட்டினியால் வாடும் எதிர்காலம் ஒன்றையும் செதுக்கிக்கொண்டு வருகின்றது என்பதை நினைவில் கொள்வோம்!

"யாவர்க்குமாம் உண்ணும்போதொரு கைப்பிடி"

### உசாத்துணை இணையத்தள முகவரிகள்:

1.Who.int, 2020, COVID-19 And Food Safety: Guidance for Food Businesses, viewed 25 April 2020, <https://www. who.int/publications-detail/covid-19-and-food-safety-guidance-for-food-businesses>.

2.Fsai.ie, 2020, COVID-19 And Food, viewed 25 April 2020, <https: //www.fsai.ie/faq/coronavirus.html>

3.Unicef.org, 2020, Affordableand Healthy Eating Tips During the Coronavirus Disease (COVID-19) Outbreak, viewed 25 April 2020, <https://www.unicef.org/coronavirus/easy-affordable-and-healthy-eating-tips-during-coronavirus-disease-covid-19-outbreak>

4.Hopkinsmedicine.org, 2020, Coronavirus and 5 Questions About Safe Snacking, viewed 01 May 2020, <https://www.hopkinsmedicine.org/health/conditions-and-diseases/coronavirus/coronavirus-and-5-questions-about-safe-snacking>

5.Centers for Disease Control and Prevention, 2020, Coronavirus Disease 2019 (COVID-19) - Environmental Cleaning and Disinfection Recommendations, viewed 02 May 2020, https://www. cdc.gov/coronavirus/2019-ncov/prevent-getting-sick/cleaning-disinfection.html>

(முற்றும்)

கலாநிதி பூ. ஐங்கரன்
சிரேஷ்ட விரிவுரையாளர், இரசாயனவியல்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
சு. சிவானுஜன், ச. அனுலக்சன்
இறுதியாண்டு மாணவர்கள், இரசாயனவியல்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

# உலகளவில் கொரோனாத் தொற்றால் 2 இலட்சத்து 45 ஆயிரம் பேர் பலி

(ஜெனிவா)

உலகம்முழுவதும்கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 2 இலட்சத்து 45 ஆயிரத்தை கடந்தது.

சீனாவின் ஹூபேய் மாகாணம் வுஹான் நகரிலுள்ள ஒரு சந்தைப் பகுதியிலிருந்து கடந்த ஆண்டு டிசெம்பர்மாதம்கொரோனா வைரஸ் கண்டுபிடிக்கப்பட்டது. இந்த வைரஸ் தற்போது உலகின் 210 நாடுகளுக்குப் பரவி பெரும் மனித உயிரிழப்புக்களை ஏற்படுத்தி வருகிறது.

கொரோனாவைக் குணப்படுத்தும் வகையிலான தடுப்பு மருந்தை கண்டுபிடிக்க விஞ்ஞானிகள் தீவிர முயற்சி மேற்கொண்டு வருகின்றனர். ஆனாலும் இந்த வைரஸின் தாக்கமும் அதனால் ஏற்படும் உயிரிழப்புக்களும் நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே வருகிறது.

இந்நிலையில், உலகம் முழுவதும் கொரோனா வைரஸ் தாக்குதலுக்கு பலியானோர் எண்ணிக்கை 2 இலட்சத்து 45 ஆயிரத்தைத் தாண்டியது.

நேற்றுக்காலை நிலவரப்படி, 35 இலட்சத்து 379 பேருக்கு வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டது. வைரஸ் பரவியவர்களில் 21 இலட்சத்து 27 ஆயிரத்து 43 பேர் சிகிச்சை பெற்று வருகின்றனர். சிகிச்சை பெறுபவர்களில் 50 ஆயிரத்து 739 பேரின்நிலைமை கவலைக்கிடமாகவுள்ளது. இந்தக் கொடிய வைரஸுக்கு உலகம் முழுவதும் இதுவரை 2 இலட்சத்து 45 ஆயிரத்து 38 பேர் உயிரிழந்தனர்.

கொரோனாவுக்கு அதிக உயிரிழப்புக்களைச் சந்தித்த நாடுகள்:-

அமெரிக்கா - 67 ஆயிரத்து 448, ஸ்பெயின் - 25 ஆயிரத்து 100, இத்தாலி - 28 ஆயிரத்து 710, இங்கிலாந்து - 28 ஆயிரத்து 131, பிரான்ஸ் - 24 ஆயிரத்து 760, ஜேர்மனி - 6,812, ரஷ்யா - 1,280, துருக்கி - 3,336, ஈரான் - 6,203, பிரேசில் - 6,761, சீனா -4,633, கனடா - 3,566, பெல்ஜியம் - 7,844, பெரு - 1,200, நெதர்லாந்து - 4,987, இந்தியா - 1,301, சுவிட்சர்லாந்து - 1,762, ஈக்குவடோர் - 1,371, போர்த்துக்கல்- 1, 23, மெக்சிக்கோ - 2,061, சுவீடன் 2,669, அயர்லாந்து - 1,286 என்பனவாகும். (இ-7)

# கொரோனாவால் 545 கோடி மக்கள் பாதிக்கப்படும் அபாயம்

## அமெரிக்க விஞ்ஞானிகள் கணிப்பு

(நியூயோர்க்)

உலகம் முழுவதும் கொரோனாத் தாக்குதலுக்கு 545 கோடி மக்கள் பாதிக்கப்படும் அபாயம் உள்ளதாக அமெரிக்க விஞ்ஞானிகள் கணித்துள்ளனர்.

சீனாவின் வுஹான் நகரில் முதன் முதலில் அடையாளம் காணப்பட்ட கொரோனா வைரஸ், இன்று உலகையே தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளது.

இந்த வைரஸ் இன்னும் எவ்வளவு காலம் தாக்குதல் நடத்தி, எவ்வளவு பேரை பாதிப்படையச் செய்யும் என்ற மிகப் பெரிய கேள்வி எழுந்துள்ளது.

இதற்கான விடையை தேடுவதில் அமெரிக்காவின் மின்னசோட்டா மாகாண பல்கலைக் கழகத்தின் தொற்று நோய்த் துறை விஞ்ஞானிகள் விரிவான ஆய்வுகளை மேற்கொண்டனர்.

இது தொடர்பாக உலகை அதிகளவில் பாதிக்கச் செய்த ஸ்பானிஷ் புளூ, சார்ஸ், மெர்ஸ், எபோலா, ஸ்வைன் புளூ ஆகியவை தாக்குதல் நடத்திய கால கட்டங்களில் எவ்வளவு பேர் பாதிக்கப்பட்டனர்? எத்தனை பேர் உயிரிழந்தனர்? அந்த வைரஸ்களின் வீரியம் எப்படி இருந்தது? என்பதை ஒப்பீடு செய்து, அதன் அடிப்படையில் இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

அப்போது, 780 கோடி கொண்ட உலக மக்கள் தொகையில் 60 சதவீதம் முதல் 70 சதவீதம் வரையிலான (அதாவது 468 கோடி முதல் 545 கோடி வரை) மக்கள் கொரோனாவால் பாதிப்படைய வாய்ப்புள்ளது என்று அமெரிக்க விஞ்ஞானிகள் கணித்துள்ளனர்.

அதேநேரம் எவ்வளவு உயிர்களை கொரோனா காவு கொள்ளும்? என்ற கணிப்பை அவர்கள் தெரிவிக்கவில்லை.

இதுபற்றி அமெரிக்க விஞ்ஞானிகள் தெரிவிக்கையில்,

கொரோனா வைரஸ் 18 முதல் 24 மாதங்கள் வரை தனது தாக்குதலை தொடரும். கொரோனாவை கட்டுப்படுத்த தடுப்பூசி கண்டுபிடிக்கப்பட வேண்டும். இல்லையென்றால் இதன் தாக்குதல் எதிர்பார்ப்பதை விட கூடுதலாக இருக்கும். ஏனென்றால், இந்த வைரஸ் மனித சமுதாயத்துக்கு மிகவும் புதியது. இதற்கான நோய் எதிர்ப்பு சக்தி யாருக்கும் இல்லை.

மேலும், ஒருவர் மூலம் இன்னொருவருக்கு கொரோனா தொற்று பரவுவது முந்தைய வைரஸ்களை விட அதிக சராசரி வீதத்தில் காணப்படுகிறது.

அதேநேரம் ஒட்டுமொத்த உலக சமுதாயமும் இந்த 2 ஆண்டுகளில் கொரோனா வைரஸைச் சமாளிக்கும் அளவிற்கு நோய் எதிர்ப்புச் சக்தி (herd im munity) திறனை படிப்படியாகப் பெற்றுவிடும். அப்போது தானாகவே கொரோனாவின் தாக்கம் முடிவுக்கு வரும் என விஞ்ஞானிகள் கூறினர். உலக நாடுகளுக்கு மின்னசோட்டா பல்கலைக்கழக விஞ்ஞானிகள் சில அறிவுரைகளை வழங்கினர்.


அவை வருமாறு:-

சுகாதாரத் துறையைச் சேர்ந்தவர்கள், இந்த பெருந்தொற்று நோய் விரைவில் ஒழிந்துவிடும் என்று பிரசாரம் செய்வதைத் தவிர்க்க வேண்டும்.

கொரோனாவுக்கு எதிராக மக்கள் நீண்ட போராட்டத்துக்கு தயாராக இருப்பது அவசியம் என்கிற விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். இந்தக் கோடை காலத்தில் கொரோனாவின் தாக்கம் குறைவதற்கு வாய்ப்பில்லை.

எதிர்வரும் இலையுதிர் காலம், குளிர்காலத்தின் போது கொரோனாவின் மிகப்பெரிய 2 ஆவது அலைத் தாக்கம் இருக்கும் என மேலும் தெரிவிக்கப்பட்டது. (இ-7)

# கொரோனாவுக்குத் தடுப்பூசி கண்டறிய சர்வதேச ஒத்துழைப்பு அவசியம் தேவை போப்பாண்டவர் வேண்டுகோள்



(வாடிகன்சிற்றி)

கொரோனாவுக்கு தடுப்பூசி கண்டறிய சர்வதேச ஒத்துழைப்பு அவசியம் தேவை என்று போப்பாண்டவர் வேண்டுகோள் விடுத்தார். போப்பாண்டவர் பிரான்சிஸ், நேற்று முன்தினம் அப்போஸ்தல அரண்மனை நூலகத்தில் இருந்தபடி ஆசி வழங்கினார்.

இதன்போது அவர் தெரிவிக்கையில், கொரோனா வைரஸுக்கு பாதுகாப்பான, உறுதி வாய்ந்த தடுப்பூசி கண்டறியும் பணி பல நாடுகளில் ஏற்கனவே நடந்து வருகிறது. நோயாளிகளுக்கு சிகிச்சை அளிப்பதில் வெவ்வேறு மருந்துகளைப் பயன்படுத்திய அனுபவங்களை விஞ்ஞானிகளும் வைத்தியர்களும் பகிர்ந்து வருகிறார்கள்.

தடுப்பூசி கண்டுபிடிப்பதில் சர்வதேச ஒத்துழைப்பு அவசியம். நோய்வாய்ப்பட்ட ஒருவர் மருத்துவ வசதி பெறுவதில், உலகளாவிய அத்தியாவசிய தொழில்நுட்பங்களைப் பெறும் உரிமை அளிக்கப்பட வேண்டும்.

மேலும், கொரோனா பிரச்சினையிலிருந்து மனிதர்கள் மீள கடவுளை வேண்டி, அனைத்து மதத்தினரும் எதிர்வரும் 14 ஆம் திகதி பிரார்த்தனை, நோன்பு மற்றும் தர்ம காரியங்களில் ஈடுபட வேண்டும் என அவர் மேலும் வேண்டுகோள் விடுத்தார். (இ-7)

# ஸ்பெயினில் கொரோனாவால் 25 ஆயிரத்தைக் கடந்த பலி

(மட்ரிட்)

ஸ்பெயினில் கொரோனாவால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 25 ஆயிரத்தைக் கடந்தது.

உலகம் முழுவதும் 35 இலட்சத்து 23 ஆயிரத்து 355 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டது. வைரஸ் பரவியவர்களில் 21 இலட்சத்து 35 ஆயிரத்து 63 பேர் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

சிகிச்சை பெறுபவர்களில் 50 ஆயிரத்து 524 பேரின் நிலைமை கவலைக்கிடமாகவுள்ளது.

கொரோனாவால் பாதிக்கப்பட்டவர்களில் 11 இலட்சத்து 41 ஆயிரத்து 898 பேர் சிகிச்சைக்குப்பின் குணமடைந்தனர். ஆனாலும் இந்தக் கொடிய வைரஸுக்கு 2 இலட்சத்து 46 ஆயிரத்து 394 பேர் உயிரிழந்தனர்.



சீனாவின் ஹூபேய் மாகாணம் வுஹான் நகரில் கடந்த ஆண்டு டிசெம்பர் மாதம் கண்டுபிடிக்கப்பட்ட கொரோனா வைரஸ் அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளைப் புரட்டியெடுத்து வருகிறது.

அமெரிக்கா, இத்தாலி, இங்கிலாந்துக்கு அடுத்தபடியாக ஸ்பெயினில் கொரோனா தீவிரமடைந்து வருகிறது.

இந்நிலையில், ஸ்பெயினில் கொரோனா வைரஸ் தாக்குதலுக்கு உயிரிழந்தோர் எண்ணிக்கை 25 ஆயிரத்தைக் கடந்தது.

நேற்றுக்காலை 9 மணி நிலவரப்படி, ஸ்பெயினில் 2 இலட்சத்து 47 ஆயிரத்து 122 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டது.

மேலும், வைரஸ் தாக்குதலுக்கு அந்நாட்டில் பலியானோர் எண்ணிக்கை 25 ஆயிரத்து 264 ஆக அதிகரித்தது. (இ-7)


## பசுக்கன்றை காணவில்லை

பாண்டியன் தாழ்வைச் சேர்ந்த பத்து மாத Brown நிற 413603850009 எனும் இலக்கம் பொறிக்கப்பட்ட பசுக்கன்று கடந்த 24/04/2020 வெள்ளிக்கிழமையிலிருந்து காணவில்லை. இக்கன்றைப் பற்றிய தகவல் அறிந்தால் கீழ்க் காணும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

கன்று இல்லாததால் தாய்ப்பசு சாப்பிடாமல் கதறிக் கொண்டிருக்கின்றது. பசுக்கன்று உங்கள் கன்றோடு சேர்ந்து இருந்தாலும் அறியத் தரவும்.

சன்மானம் வழங்கப்படும். (2673)

தொடர்புகளுக்கு:- 0774206382

## “வீண் அச்சம் வேண்டாம்”

# கொரோனா பரவல் அபாயம் 3 இடங்களுக்குள் முடக்கம்

## வைத்திய நிபுணர் விஜயமுனி தெரிவிப்பு

(கொழும்பு)

கொரோனா வைரஸ் பரவல் காரணமாக பெரும் அச்சுறுத்தல்களை எதிர்கொண்ட கொழும்பின் நிலைமை தற்போது பூரண கட்டுப்பாட்டுக்குள் உள்ளதாகவும், அது தொடர்பில் வீண் அச்சம் தேவை இல்லை எனவும் கொழும்பு மாநகர சபையின் பிரதான சுகாதார வைத்திய அதிகாரி, விசேட வைத்திய நிபுணர் ருவான் விஜயமுனி தெரிவித்தார்.

கொரோனா வைரஸ் பரவல் தொடர்பில், எதிர்வரும் 11 ஆம் திகதி தலைநகர் உள்ளிட்ட அனைத்துப் பகுதிகளிலும் அன்றாட நடவடிக்கைகளை வழமைக்குக் கொண்டுவரத் திட்டமிடப்பட்டுள்ள நிலையில், அரச, தனியார் நிறுவனங்களின் நடவடிக்கைகளும் ஆரம்பிக்கப்படவுள்ளன.

அவ்வாறான பின்னணியில் கொழும்பின் தற்போதைய நிலை குறித்து, மாநகர சபையின் பிரதான சுகாதார வைத்திய அதிகாரியிடம் தகவல் கோரிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

“கொழும்பு மாநகர சபையின் நிர்வாக எல்லைக்குள் வரும் தலைநகர்ப் பகுதியில் மட்டும் 124 கொரோனா வைரஸ் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

எனினும் கொரோனா தொற்று பரவலுக்கான குறைந்தபட்ச சாத்தியப்பாடுகளைக் கொண்ட பகுதிகள் என நம்பும் இடங்களை நாம் மூன்று இடங்களுக்குள் மட்டுப்படுத்தியுள்ளோம்.

அதாவது தற்போது கொழும்பில்; நாகல்கம வீதி, பண்டாரநாயக்க மாவத்தை மற்றும் நாரஹேன்பிட்டி - தாபரே மாவத்தை ஆகிய மூன்று பகுதிகளில் மட்டுமே கொரோனா பரவலுக்கான சாத்தியப்பாடுகள் உள்ளன.

இந்நிலையில் அப்பகுதிகளை நாம் தொடர்ந்து தனிமைப்படுத்திக் கண்காணித்து வருகின்றோம். அம்மூன்று பகுதிகளுக்கும் வெளியே தொற்றாளர்கள் அடையாளம் காணப்படுவதற்கான சாத்தியப்பாடுகள் இல்லை.

எனினும் அந்தப் பகுதிகளை அண்மித்துள்ள, அப்பகுதி தொற்றாளர்களுடன் தொடர்பிலிருந்த கொழும்பு மாநகர சபையின் எல்லைக்குள் வசிக்கும் அனைவரையும் கண்டறிந்து தேவையான நடவடிக்கைகளை நாம் முன்னெடுத்துள்ளதால் தற்போதைய சூழலில் கொழும்பின் நிலை பூரண கட்டுப்பாட்டுக்குள்ளேயே உள்ளது.

இந்நிலையில் கொரோனா வைரஸ் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்ட பகுதிகளிலும், ஏனைய பகுதிகளிலும் இனி மேலும் அப்பகுதியில் கொரோனா தொற்று பரவாது என்பதை நூற்றுக்கு நூறு வீதம் உறுதி செய்யும் விதமாக நாம் விசேட இரத்த மாதிரி பரிசோதனைகள் ஊடான ஆய்வொன்றினையும் முன்னெடுத்து வருகின்றோம்.

அதாவது, கொழும்பு மாநகர சபை எல்லையில் அதிக கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்ட பண்டாரநாயக்க மாவத்தை பகுதியில் இதற்கான நடவடிக்கைகளை நாம் ஆரம்பித்துள்ளோம்.

பண்டாரநாயக்க மாவத்தையில் சில கொரோனா தொற்றாளர்களை நாம் பரிசோதனை செய்த போது அவர்களுக்கு எந்த நோய் அறிகுறிகளும் இருக்கவில்லை.

அத்துடன் கொரோனா தொற்றாளருடன் பழக்கத்தில் இருந்த பலருக்குக் கூட அந்தத் தொற்று இருக்கவில்லை. இதற்குக் காரணம் கொரோனாத் தொற்று ஒருவரின் உடலுக்குள் சங்கமித்ததும், குறித்த நபர்களின் நோய் எதிர்ப்பு அணுக்கள் வீரியமாகச் செயற்பட்டு கொரோனா வைரஸ் கிருமிகளை அழித்துள்ளமையே யாகும். எனவே நோய் எதிர்ப்பு அணுக்களின் வீரியத்தின் அடிப்படையில், இந்தத் தொற்றுப் பரவலுக்கான வாய்ப்புக்கள் குறைவடையும்.



எனவே வளர்ச்சியடைந்த நாடுகள் தற்போது ஒருவரின் நோய் எதிர்ப்பு சக்தியை பரிசோதித்து அதனூடாக தீர்மானங்களுக்கு வரும் வழிமுறைகளை ஆரம்பித்துள்ளன.

அதன்படி, தற்போது தனிமைப்படுத்தப்பட்டுள்ள அதிக தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்ட பண்டாரநாயக்க மாவத்தையில், ஏற்கனவே கொரோனா தொடர்பில் பி.சி.ஆர். பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்பட்ட, உட்படுத்தப்படாத நபர்கள் பலரின் இரத்த மாதிரிகள் பெறப்பட்டு ஸ்ரீ ஜெயவர்தனபுர வைத்தியசாலைக்கு ஆய்வுகளுக்கு அனுப்பட்டுள்ளன. அதன் பெறுபேறுகளை அடிப்படையாகக் கொண்டு பிரதேசத்தின் கொரோனா பரவல் சாத்தியப்படுகள் தொடர்பில் உறுதியான முடிவுகளுக்கு வரக் கூடியதாக இருக்கும்” என அவர் மேலும் சுட்டிக்காட்டினார். (இ-7)

## வழக்குகள் அழைக்கப்படும் திகதி

(யாழ்ப்பாணம்)

கொரோனா வைரஸ் பரவல் காரணமாக ஊரடங்குக் காலத்திலும் அதன் பின்னரும் அதாவது 16.03.2020 ஆம் திகதி முதல் 30.04.2020 ஆம் திகதி வரையாகத் தவணை வழங்கப்பட்ட மல்லாகம் மாவட்ட நீதவான் நீதிமன்ற வழக்குகள் பின்வரும் திகதிகளில் அழைக்கப்படும் என நீதிமன்றப் பதிவாளர் அறிவித்துள்ளார்.

| முன்னைய திகதி | மாவட்ட நீதிமன்ற (குடியியல்) வழக்குகள் | நீதவான் நீதிமன்ற (குற்றவியல்) வழக்குகள் | தாபரிப்பு வழக்குகள் |
|---|---|---|---|
| 16.03 | 18.05 | 18.05 | |
| 17.03 | 19.05 | 19.05 | |
| 18.03 | 13.05 | 13.05 | |
| 19.03 | 21.05 | 21.05 | |
| 20.03 | 22.05 | 22.05 | 15.05 |
| 23.03 | 01.06 | 01.06 | |
| 24.03 | 26.05 | 26.05 | |
| 25.03 | 27.05 | 27.05 | |
| 26.03 | 28.05 | 28.05 | |
| 27.03 | 29.05 | 29.05 | |
| 30.03 | 08.06 | 08.06 | |
| 31.03 | 02.06 | 02.06 | |
| 01.04 | 03.06 | 03.06 | |
| 02.04 | 04.06 | 04.06 | |
| 03.04 | 12.06 | 12.06 | |
| 06.04 | 08.06 | 08.06 | |
| 08.04 | 16.06 | 10.06 | |
| 09.04 | 11.06 | 11.06 | |
| 14.04 | 10.06 | 16.06 | |
| 15.04 | 17.06 | 17.06 | |
| 16.04 | 18.06 | 18.06 | |
| 17.04 | 19.06 | 19.06 | 22.05 |
| 20.04 | 22.06 | 22.06 | |
| 21.04 | 23.06 | 23.06 | |
| 22.04 | 24.06 | 24.06 | |
| 23.04 | 25.06 | 25.06 | |
| 24.04 | 26.06 | 26.06 | 15.05 |
| 27.04 | 29.06 | 29.06 | |
| 28.04 | 30.06 | 30.06 | |
| 29.04 | 01.07 | 01.07 | |
| 30.04 | 02.07 | 02.07 | |

என மேலும் அறிவித்துள்ளார். (இ)

## அக்குரஸ்ஸ பிரதேச சபையின் தவிசாளர் உட்பட நால்வர் கைது

(மஸ்கெலியா)

அக்குரஸ்ஸ பிரதேச சபையின் தவிசாளர் முனிதாஸ கமகே உட்பட நால்வர் மஸ்கெலியா - மவுசாகலை பொலிஸ் காவலரணில் வைத்து கைது செய்யப்பட்டனர்.

ஊரடங்கு அனுமதிப்பத்திரமின்றி, அக்குரஸ்ஸயிலிருந்து சிவனொளிபாதமலைக்கு லொறியொன்றில் பயணித்த போதே நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

கைப்பற்றப்பட்ட லொறியில் பயணப்பொதிகள் சில காணப்பட்டதுடன், அது பிரதேச சபைக்குச் சொந்தமான லொறி எனவும் பொலிஸார் தெரிவித்தனர். (இ-7)

# அரச சொத்துக்கள் மோசடி!

## ராஜபக்ஷவினர் மீது திஸ்ஸ சாடல்

(கொழும்பு)

கொரோனா வைரஸ் பரவலைத் தடுப்பதற்காக செயலணி அமைத்துள்ளதாகக் குறிப்பிட்டு அரச சொத்துக்களை தமது தனிப்பட்ட சொத்துப்போல் பயன்படுத்தும் மோசடிகரமான செயற்பாடுகளில் அரசாங்கம் ஈடுபட்டுள்ளதாக குற்றஞ்சாட்டிய ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க, அரசியலமைப்பை மீறா ஜனநாயக ஆட்சியை முன்னெடுக்குமாறும் அரசாங்கத்திற்கு கோரிக்கை விடுத்தார்.

எதிர்க்கட்சிக் தலைவர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அரசியலமைப்புக்கு அமைவாக செயற்படும் ஆட்சியையே மக்கள் விரும்புகின்றனர். இதே வேளை பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் இணைந்து முறையான சட்டதிட்டங்களுக்கமைய முன்னெடுக்கும் ஆட்சிக்கே வரவேற்பும் இருக்கின்றது. இதனாலேயே ஐக்கிய மக்கள் சக்தி அலரிமாளிகைக்குச் செல்வதைப் புறக்கணித்தது.

ஜனாதிபதி பாராளுமன்றத்தைக் கூட்ட முடியாது என்று உறுதியாகக் கூறி வருகின்ற நிலையில், அதற்கு ஆதரவளிக்கும் வகையில் பிரதமர் மகிந்த அலரி மாளிகைக்கு வருமாறு கோரிக்கை முன்வைப்பதாகவே தோன்றுகின்றது. அங்கு செல்வதால் அரசியலமைப்புக்கு புறம்பாக முன்னெடுக்கப்படும் ஆட்சிக்கு ஒத்துழைப்பு வழங்குவதாகவே அமையும். இதேவேளை நுகர்வோர் அதிகார சபையால் வெளியிடப்பட்ட விசேட வர்த்தமானி அறிவித்தலில் பருப்பு மற்றும் மீன் ரின்களுக்கான நிர்ணய விலையை நீக்குமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

நுகர்வோர் அதிகாரசபைக்கு எவ்வாறு நிர்ணய விலையை மாற்றுவதற்கு அதிகாரம் கிடைக்கப் பெற்றுள்ளது. நுகர்வோர்களின் பாதுகாப்பு தொடர்பில் அக்கறை செலுத்த வேண்டிய அதிகார சபை அதன் பொறுப்பை மீறிச் செயற்படுகின்றது.



பால்மாவின் விலையும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

கொவிட் - 19 வைரஸ் பரவலால் ஏற்பட்டுள்ள நெருக்கடி காலகட்டத்தில் மக்களுக்கு சலுகைகளைப் பெற்றுக் கொடுக்காமல் விலை அதிகரிப்பை மேற்கொள்வதால் மக்களுக்கே பெரும் நெருக்கடிகளை எதிர்நோக்க வேண்டி ஏற்படும்.

வைரஸ் பரவலின் காரணமாக நாட்டின் பொருளாதாரம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. தனியார் துறை மற்றும் அரச நிர்வாகத் துறையிலும் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. கொவிட் -19 வைரஸ் பரவலுக்குப் பின்னர் பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதற்காக அரசாங்கத்திடம் முறையான செயற்பாடுகள் ஏதாவது காணப்படுகின்றதா? இந்த விடயம் தொடர்பில் சிந்தனை செய்யாமல், நிதி தொடர்பிலான முகாமைத்துவத்தை தமது சகோதரரின் கையில் ஒப்படைத்து விட்டு நிதி மோசடியில் ஈடுப்பட்டு வருகின்றனர்.

அரச சொத்தை தமது சொத்தாக பயன்படுத்துவதை நிறுத்திக் கொண்டு முறையான ஆட்சியை முன்னெடுப்பதற்கான செயற்பாடுகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும். ஆட்சிப் பலத்தை தக்கவைத்துக் கொள்வது தொடர்பில் சிந்தனை செய்யாது மக்களின் நலன்கருதிய ஆட்சியை முன்னெடுங்கள் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# உலகளவில் 35 இலட்சத்தைத் தாண்டியது வைரஸ் பரவியவர்களின் எண்ணிக்கை



(ஜெனிவா)

உலகம் முழுவதும் கொரோனா வைரஸ் பரவியவர்களின் எண்ணிக்கை 35 இலட்சத்தைத் தாண்டியது.

சீனாவின் ஹூபேய் மாகாணம் வுஹான் நகரில் கடந்த ஆண்டு டிசெம்பர் மாதம் கொரோனா வைரஸ் கண்டுபிடிக்கப்பட்டது. தற்போது உலகின் 210 நாடுகளுக்கு பரவிய இந்த வைரஸ் பெரும் மனித இழப்புக்களை ஏற்படுத்தி வருகிறது.

இந்தக் கொடிய வைரஸுக்கு தடுப்பு மருந்து கண்டுபிடிக்கும் பணியில் விஞ்ஞானிகள் தீவிர முயற்சி மேற்கொண்டு வருகின்றனர். ஆனாலும், கொரோனாவின் தாக்கமும் அதனால் ஏற்படும் உயிரிழப்புக்களும் நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே வருகிறது.

இந்நிலையில், கொரோனா வைரஸ் பரவியவர்களின் எண்ணிக்கை 35 இலட்சத்தைத் தாண்டியது. நேற்றுக் காலை நிலவரப்படி உலகம் முழுவதும் 35 இலட்சத்து 379 பேருக்கு கொரோனா தொற்று உறுதியானது.

வைரஸ் பரவியவர்களில் 21 இலட்சத்து 27 ஆயிரத்து 43 பேர் சிகிச்சை பெற்று வருகின்றனர். சிகிச்சை பெறுபவர்களில் 50 ஆயிரத்து 739 பேரின் நிலைமை கவலைக்கிடமாகவுள்ளது.

கொரோனா அதிகம் பரவிய நாடுகளின் விபரங்கள் பின்வருமாறு,

அமெரிக்கா - 11 இலட்சத்து 60 ஆயிரத்து 840, ஸ்பெயின் - 2 இலட்சத்து45ஆயிரத்து 567, இத்தாலி - 2 இலட்சத்து 9 ஆயிரத்து 328, இங்கிலாந்து - ஒரு இலட்சத்து 82 ஆயிரத்து 260, பிரான்ஸ் - ஒரு இலட்சத்து 68 ஆயிரத்து 967, ரஷ்யா - ஒரு இலட்சத்து 34 ஆயிரத்து 687, துருக்கி - ஒரு இலட்சத்து 24 ஆயிரத்து 375, ஈரான் - 97 ஆயிரத்து 424, பிரேசில் - 97 ஆயிரத்து 100, சீனா - 82 ஆயிரத்து 877, கனடா - 56 ஆயிரத்து 714, பெல்ஜியம் - 49 ஆயிரத்து 906, பெரு - 42 ஆயிரத்து 534, நெதர்லாந்து - 40 ஆயிரத்து 236, இந்தியா - 37 ஆயிரத்து 776, நெதர்லாந்து - 29 ஆயிரத்து 817, ஈக்குவடோர் - 27 ஆயிரத்து 464, சவுதி அரேபியா - 25 ஆயிரத்து 459, போர்த்துக்கல் - 25 ஆயிரத்து 190 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். (இ-7)

# குப்பைகளை அகற்றுமாறு மக்கள் கோரிக்கை



(கரணவாய்)

கரணவாய் கலட்டி கிழக்கு வீதியில் தேங்கியுள்ள குப்பைகளை அகற்றுமாறு கரவெட்டி பிரதேச சபையிடம் அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்தனர்.

வடமராட்சி தெற்கு-மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட விக்னேஸ்வரா பாடசாலைக்குச் செல்லும் கரணவாய் கலட்டி கிழக்கு வீதியோரத்தில் குப்பைகள் தேங்கி துர்நாற்றம் வீசுகின்றன.

இதனால் அவ் வீதியில் தேங்கியுள்ள குப்பைகளை அகற்றுமாறு கரவெட்டி பிரதேச சபையி டம் அப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்தனர்.

நாளாந்தம் பொதுமக்கள், பாடசாலை மாணவர்கள் இவ் வீதியை பயன்படுத்துகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஜ-8-60)

# பாதுகாப்புத் துறையினரது பரிந்துரைகளை பின்பற்றுக அமைச்சர் பிரசன்ன அறிவுறுத்து

(கொழும்பு)

சுதந்திர வர்த்தக வலயத்திற்குச் சொந்தமான கைத்தொழில்கள், பிற தொழிற்சாலைகள் சேவை நடவடிக்கையை ஆரம்பிக்கும் போது சுகாதார, பாதுகாப்புத் துறையினரது பரிந்துரைகளை முழுமையாகப் பின்பற்ற வேண்டும். மேற்பார்வை நடவடிக்கைகள் முதலீட்டுச் சபைக்குப் பொறுப்பாக்கப்பட்டது என முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.



நாடு தழுவிய ரீதியில் 254 கைத்தொழிற்சாலைகள் தொழில் நடவடிக்கைகளை மீள ஆரம்பித்தன. 6,230 ஊழியர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டனர்.

கட்டுநாயக்க சுதந்திர வர்த்தக வலயத்திற்குட்பட்ட 62 தொழிற்சாலைகள் கடந்த புதன்கிழமை 6,695 ஊழியர்களுடன் மீள ஆரம்பிக்கப்பட்டன.

பியகம சுதந்திர வர்த்தக வலயத்துக்குச் சொந்தமான 52 தொழிற்சாலைகள் 9031 சேவையாளர்களுடனும் வடக்கு-கிழக்கிலுள்ள 25 தொழிற்சாலைகள் 7,292 சேவையாளர்களுடன் தொழில் நடவடிக்கைகளுக்காக ஆரம்பிக்கப்பட்டன.

தற்போது மட்டுப்படுத்தப்பட்ட தொழிற்றுறை சேவை நடவடிக்கைகள் எதிர்வரும் 11 ஆம் திகதி முதல் வழமைக்குத்திரும்பும்.

ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்பட்டதன் பின்னரும் சுகாதாரத் தரப்பினர் பரிந்துரை செய்த பாதுகாப்பு நடவடிக்கைகள் முழுமையாகச் செயற்படுத்தப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## fb (f)ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... 2030 facebook

துஷ்ரயா




கதில்




ஹாக்காஸ்





வைதேகி




நகுல்




லேனுகா




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# முல்லையில் போதைப் பொருள் பாவனையால் ஏற்படும் பிரச்சினைகள் தொடர்பாக முறையிட புதிய தொலைபேசி இலக்கம் அறிமுகம்

(கண்டாவளை)

முல்லைதீவு மாவட்டத்தில் போதைப் பொருள் பாவனையினால் ஏற்படும் பிரச்சினைகள் தொடர்பான முறைப்பாடுகளை மேற்கொள்ள துரித தொலைபேசி இலக்கம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாக மாவட்டச் செயலகத்தின் ஊடகப் பிரிவினால் தெரிவிக்கப்ட்டுள்ளது.

தற்போதைய சூழலில் அதிகரித்துக் காணப்படும் கசிப்பு உற்பத்தி விற்பனை மற்றும் போதைப் பொருள் பாவனை என்பவற்றால் பல்வேறுபட்ட பிரச்சினைகள் தலைதூக்கியுள்ளன. இது தொடர்பில் பொது மக்களுக்கு விழிப்புணர்வூட்டும் வகையில் முல்லைதீவு மாவட்டத்தில் போதைப் பொருள் பாவனையினால் ஏற்படும் பிரச்சினை தொடர்பான முறைப்பாடுகளை மேற்கொள்ள துரித தொலைபேசி இலக்கம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாக மாவட்டச் செயலகத்தால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் அதிகரித்து வரும் போதைப் பொருள் பாவனையினால் போதைக்கு அடிமையாவதைத் தடுப்பதற்கும், அவ்வாறு அடிமையானவர்களை குணப்படுத்துவதற்குமான துரித நடவடிக்கையினை தேசிய அபாயகர ஔடதங்கள் அதிகார சபை (NDDCB) எடுத்து வருகின்றது.

இச்சபையினால் பொதுமக்களுக்கு அறிவூட்டும் வகையில் துண்டுப் பிரசுரங்கள் வெளியிடுதல், விசேட உளவள ஆலோசனைகளை வழங்குதல் போன்ற செயற்பாடுகளை மேற்கொண்டு வருவதுடன் தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனா வைரஸ் தாக்கத்தினைக் கருத்திற் கொண்டு புதிய துரித இலக்கமான 071 030 1301 இனை அறிமுகம் செய்துள்ளது.

இதனூடாக பொதுமக்கள் போதைப்பொருள் பாவனையினால் ஏற்படும் பிரச்சினை தொடர்பான முறைப்பாடுகள் மற்றும் ஆலோசனைகளை 24 மணிநேரமும் குறித்த துரித இலக்கத்திற்கு தொடர்பினை ஏற்படுத்துவதன் மூலம் சேவையினைப் பெற்றுக்கொள்ள முடியுமென தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டு சபையின் வெளிக்கள உத்தியோகத்தர் அன்ரனி எட்வின் றொஜர் அரச தகவல் திணைக்கள மாவட்ட ஊடகப் பிரிவிற்குத் தெரிவித்தார். (9-315)

# விவசாய உபகரணங்கள் வழங்கல்



(கிளிநொச்சி)

உலக தொழிலாளர் தினத்தை முன்னிட்டு கரைச்சிப் பிரதேசசபை உறுப்பினர் சண்முகராசா ஜீவராசாவினால் தருமபுரம் பகுதியில் விவசாயிகளுக்கு தொழில் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

தொழிலாளர் தினத்தன்று நடைபெற்ற இந்த நிகழ்வில் முன்னாள் வடக்கு மாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜா பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு விவசாயிகளுக்கு தொழில் உபகரணங்களை வழங்கிவைத்தார். (9-271)




# திடீர் தீ விபத்தில் வீடு முற்றாக எரிந்து நாசம்



(மன்னார்)

மன்னார் எமில் நகர் கிராம உத்தியோகத்தர் பிரிவிற்கு உட்பட்ட ஜிம்றோன் நகர் பகுதியில் உள்ள வீடு ஒன்றில் ஏற்பட்ட தீவிபத்தில் வீடு முற்றுமுழுதாக எரிந்து நாசமாகியுள்ளது.

கணவன் காலையில் கடற்றொழிலுக்கு சென்றிருந்த நிலையில் மனைவி சமைத்துக் கொண்டிருந்த பொழுது திடீரென குறித்த வீடு முழுவதும் தீப்பற்றி எரிந்துள்ளது.

ஓலையால் வேயப்பட்ட வீடு என்பதால் குறித்த வீடு ம்முழுவதும் வேகமாக தீப்பரவல் ஏற்பட்டுள்ளது. அதை தொடர்ந்து அயலவர்கள் மற்றும் நகர சபையின் தண்ணீர் பவுசரின் உதவியுடன் குறித்த தீ அணைக்கப்பட்ட போதும் வீடு முழுவதுமாக எரிந்து நாசமாகியுள்ளது.மூன்று பிள்ளைகளைக் கொண்ட இக் குடும்பம் தற்போது வீடு மாத்திரம் இன்றி அத்தியாவசிய பொருட்கள் அனைத்தையும் இழந்து நிர்க்கதியாகியுள்ளனர். கிராம உத்தியோகத்தர் மற்றும் சமூக சேவை உத்தியோகத்தர்கள் மற்றும் பொலிஸார் குறித்த பகுதிக்கு வருகை தந்து பார்வையிட்டுள்ளனர். (9-285)

# இரணைமடு குளத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் நெற் பயிர்களை அழிக்கும் கட்டாக்காலிகள்

(கண்டாவளை)

கிளிநொச்சி இரணைமடுக்குளத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ள சிறுபோக நெற்செய்கைகளை இரவு வேளைகளிலும் பகல் வேளைகளிலும் கட்டாக்காலி கால்நடைகள் அழித்து வருகின்றன.

கிளிநொச்சி இரணைமடுக்குளத்தின் கீழ் உள்ள பன்னங்கண்டி, முரசுமோட்டை, ஊரியான், சின்னக்காடு உள்ளிட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டுள்ள சிறுபோக நெய்செய்கைகளை இரவு வேளைகளிலும் பகல் வேளைகளிலும் கட்டாக்காலி கால்நடைகள் அழித்து வருகின்றன.

கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் மாவட்ட அரச அதிபர் தலைமையில் நடைபெற்ற சிறுபோக பயிர்ச்செய்கை தொடர்பான கூட்டத்தில் கால்நடை கட்டுப்பாடு மற்றும் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படும் பகுதியில் இருந்து ஒரு கிலோமீற்றர் தூரத்திற்கு அப்பால் கால்நடைகளை பராமரிக்க வேண்டும் என பல்வேறு தீர்மானங்கள் எடுக்கப்பட்டபோதும் குறிப்பிட்ட சில பகுதிகளில் சிறுபோக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ள பகுதிகளுக்கு அண்மையாகவே கால்நடைகள் வைத்துப்பராமரிக்கப்பட்டு வருகின்றன.

அத்துடன், வயல் வாய்க்கால்கள், விவசாய வீதிகள் என்பவற்றில் கால்நடைகள் விடப்பட்டு பராமரிக்கப்படுகின்றன.

இவ்வாறு வயல் அயற் பிரதேசங்களில் வைத்து பராமரிக்கப்படுவதனாலும் கால்நடைகள் கட்டாக்காலிகளாக விடப்படுவதனாலும் இரவு-பகல் வேளைகளில் நெற்பயிர்களை கால்நடைகள் அழித்து வருகின்றன.

எனவே கால்நடைகளைக் கட்டுப்படுத்தி தமது பயிர்ச்செய்கைகளைப் பாதுகாத்து உதவுமாறு பிரதேச விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கமநலசேவை நிலையங்கள் ஊடாகவும் கமக்கார அமைப்புக்கள் ஊடாகவும் கால்நடைக்கட்டுப்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

விவசாயிகளும் ஒத்துழைப்புக்களை வழங்குவதன் மூலமே கால்நடைகளை கட்டுப்படுத்த முடியும் என கமநலசேவை நிலையத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (9-315)

# தருமபுரத்தில் 58 லீற்றர் கசிப்புடன் 5 பேர் கைது

(தருமபுரம்)

தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் நேற்று பொலிஸார் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையின் போது கசிப்பை உடைமையில் வைத்திருந்த 5 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இராமநாதபுரம், அழகாபுரி, பிரமந்தனாறு, கல்லாறு பகுதிகளில் சட்டவிரோத கசிப்பு உற்பத்தியிலும் கசிப்பு விற்பனை



யிலும் ஈடுபட்ட நபர்களே மேற்படி கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களிடமிருந்து 58 லீற்றர் கசிப்பும் 218 லீற்றர் கோடாவும் தருமபுரம் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டதுடன் கசிப்பு உற்பத்திக்கு பயன்படுத்தும் உபகரணங்களும் கைப்பற்றப்பட்டதாக தருமபுரம் குற்றத் தடுப்புப்பிரிவு பொறுப்பதிகாரி சிசிர தெரிவித்துள்ளார். (9-316)

# கிளி. மாவட்ட பொது வைத்தியசாலையில் நோயாளிக்கு நேர்ந்த அவலம்

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் நேற்று முன்தினம் மாலை சிகிச்சைக்காக கொண்டு செல்லப்பட்ட அவசர நோயாளி ஒருவரை வைத்தியசாலையில் அனுமதிக்காது சுமார் மூன்று மணி நேரம் வெளிநோயாளர் பிரிவில் வைத்துவிட்டு பின்னர் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றிய சம்பவம் வைத்தியசாலை உத்தியோகத்தர்களிடையேயும் பொது மக்கள் மத்தியிலும் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது.

கிளிநொச்சி முழங்காவில் இராணுவ முகாமிலிருந்து நேற்று முன்தினம் மாலை காய்ச்சல் மற்றும் மாறாட்டம் காரணமாக அவசர நோயாளர் ஒருவர் நோயாளர் காவு வண்டி மூலம் கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளார்.

குறித்த நோயாளியை பரிசோதித்த கடமையிலிருந்த வைத்தியர் அவசர சிகிச்சைப்பிரிவில் அனுமதிக்குமாறு அனுப்பிய போதும் அந்த நோயாளியை அவசர சிகிச்சைப் பிரிவில் இருந்த வைத்தியர் ஏற்க மறுத்ததால் குறித்த நோயாளி இரவு 8 மணி வரையும் வெளி நோயாளர் பிரிவில் எந்தவித சிகிச்சைகளும் வழங்கப்படாது இருத்தி வைக்கப்பட்டுள்ளார். பின்னர் நோயாளர் காவுவண்டி மூலம் வைத்தியர்கள், உத்தியோகத்தர்கள் இன்றி த்னியாகவே யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பில் மாவட்ட பொது வைத்தியசாலையின் பொறுப்பு வைத்திய அதிகாரியிடம் வினவிய போது குறித்த சம்பவம் தொடர்பில் தனக்கும் முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாகவும் இது தொடர்பில் நடவடிக்கை எடுக்கவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (9-315)

# அக்கராயன் இடதுகரை வாய்க்கால் பகுதியில் அத்துமீறிய விதைப்புக்களை தடுத்து நிறுத்துமாறு விவசாயிகள் அரச அதிபரிடம் கோரிக்கை

(கிளிநொச்சி)

அக்கராயன் இடதுகரை வாய்க்கால் பகுதியில் இடம்பெறும் அத்துமீறிய விதைப்புக்களை தடுத்து நிறுத்துமாறு அக்கராயன் குளம் இடதுகரை வாய்க்கால் விவாசாயிகள் அரச அதிபரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பாக கிளிநொச்சி மாவட்ட அரச அதிபருக்கு அவர்கள் அனுப்பியுள்ள கடிதத்தில் மேற்படி எமது பகுதியில் 2020 ஆம் ஆண்டு சிறுபோகப் பயிர்ச்செய்கை கூட்டத்தின் தீர்மானங்களான அத்துமீறல் விதைப்புக்கள்,மேலதிக விதைப்புக்கள், இரட்டை இலக்க காணிகள் என்பன விதைத்தல் முற்று முழுதாக தடுப்பதென தீர்மானிக்கப்பட்டது. இவை அனைத்திற்கும் முரணாக சுமார் 40 ஏக்கருக்கு மேலான அத்துமீறல் காணிகள் விதைக்கப்பட்டுள்ளன. மேலும் விதைக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

எமது குளத்தின் நீரை நம்பியே கண்ணகைபுரம் படித்த வாலிபர் திட்ட ஈரப்பு நீர்ப்பாசனம், ஸ்கந்தபுரம் ஏற்று நீர்ப்பாசன திட்டங்கள் உள்ளன. இவை அனைத்திற்கும் திட்டமிட்டே நெற்பயிர்ச்செய்கைக்கான நீர் திட்டமிடப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் குளத்து நீர் குறைவாக இருந்த போது எமது பகுதி குடிநீர் இன்றி பிரதேச சபை வாகனம் மூலம் குடிநீர் வழங்கப்பட்டு வந்துள்ளது.

இப்போது நடைபெற்றுக் கொண்டுள்ள அத்துமீறிய விதைப்புக்கள், மேல்திக விதைப்புக்கள் என்பவற்றால் கழிவு வாய்க்கால்களில் வீண் விரயமாக காட்டுப் பகுதிக்குச் செல்லும் நீர் என்பவற்றினால் எமது பகுதிக்கு அடுத்துவரும் வறட்சிக் காலத்தில் குடிநீருக்குப் பெரும் தட்டுப்பாடு ஏற்படக் கூடும். ஈற்று நீர்ப்பாசனம், ஏற்று நீர்ப்பாசனத் திட்டங்கள் தொடர்ச்சியாக செய்கை மேற்கொள்ள முடியாமல் போகும்.

எனவே அத்துமீறிய விதைப்புக்கள், மேலதிக விதைப்புக்கள், கழிவு வாய்க்கால்களில் வீண் விரயமாகச் நீர் செல்லுதல் என்பவற்றைத் தடுத்து எமது தேவையைப் பூர்த்தி செய்து தருமாறு மேலும் குறித்த கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (9)

# வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை க.பொ.த.(சா/த) 2019 பெறுபேறுகள் ஒரு பார்வை



பேராசிரியர்
பொ.பாலசுந்தரம்பிள்ளை
வாழ்நாள் பேராசிரியர்,
யாழ்ப்பாணப்
பல்கலைக்கழகம்.

வடக்கு மாகாணத்தின் இன்றைய மாணவர்களின் கற்றல் செயற்பாடு பொதுப்பரீட்சை பெறுபேறுகள் மனநிறைவைத் தருவதாக இல்லை. கல்வியில் மிகவும் முன்னிலையில் இருந்த யாழ்ப்பாணம் இன்று அதன் முன்னைய பெருமை சிறப்புக்களை இழந்துள்ளது. 2019 இல் நடைபெற்ற க.பொ.த. சாதாரணதரப் பரீட்சை அடிப்படையில் க.பொ.த. உ/த கற்க தகுதிபெற்றோர் தேசிய அடிப்படையில் (73.84% தேசிய அடைவு) இருக்க வடக்கு மாகாணம் (67.74%) ஆக இருக்கின்றது.மாகாணங்கள் மட்டத்தில் கடைசி இடத்தைப் பெற்றுள்ளது.

மாவட்டநிலையிலும் யாழ்ப்பாணம் (69.27) 19 ஆவது இடத்தைப் பெற்றிருப்பது கவலை தரும் செய்தியாகும். மேலும் நாட்டில் உள்ள 99 கல்வி வலயங்களில் வடக்கு மாகாணக் கல்வி வலயங்கள் மிகவும் பின் தங்கியுள்ளன. இக் கல்வி வலயங்களில் தேசிய வகுதி நிலை பின்வருமாறு, மன்னார்-16, யாழ்ப்பாணம்- 22, வடமராட்சி-46, வவுனியா தெற்கு-68, மடு-73, தென்மராட்சி-80, முல்லைத்தீவு-85, வலிகாமம்-89, வவுனியா வடக்கு-92, கிளிநொச்சி-94, துணுக்காய்-97, தீவுகள்-99.

யாழ்ப்பாண மாவட்டத்தில் நீண்டகாலமாக சாதனைகள் படைத்த கல்லூரிகள் பல இன்று சோபையிழந்தும் சோர்வுற்றும் இயங்குவதுடன் இவைகளின் பரீட்சை அடைவுகள் சாதாரணமாகவேயுள்ளன.

வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை நீண்ட வரலாற்றைக் கொண்டும் காலத்துக்குக் காலம் நாட்டுப் பிரச்சினைகளால் பாதிக்கப்பட்ட பொழுதும் தனது பணியில் வீறுநடை போட்டுக் கொண்டிருப்பதுடன் பரீட்சை அடைவுகளில் தொய்வுறாது தொடர்ந்து ஏறுமுகத்துடன் இருப்பது பெரு மனநிறைவைத் தருகின்றது.

கடந்த 25 வருட பெறுபேறுகள் பாடசாலையின் வளர்ச்சியைக் காட்டி நிற்கின்றன. இப்பாடசாலை இன்று பெண்களின் கல்வி வளர்ச்சியில் குறிப்பாக மூன்றாம் நிலை கல்வி வளர்ச்சிக்கு பெரும் பங்காற்றிக் கொண்டிருக்கிறது. இப்பாடசாலையில் இருந்து பெரு எண்ணிக்கையான மாணவிகள் பல்கலைக் கழகங்கள், தொழில்நுட்பக் கல்லூரிகள் கல்வியியற் கல்லூரிகள், தாதியர் பயிற்சிக் கல்லூரிகளுக்கு அனுமதி பெறுகிறார்கள். இலங்கையிலுள்ள தமிழ் மகளிர்கல்லூரிகளுள் இதுவே முதன்மை இடத்தைப் பெற்றுள்ளது.

இத்தகைய பின்புலத்தில் இப்பாடசாலையின் 2019 க.பொ.த. (சா/த) பரீட்சை அடைவுகளை நோக்கின், இப்பாடசாலையில் இருந்து 252 மாணவிகள் பரீட்சைக்கு விண்ணப்பித்து 251 மாணவிகள் பரீட்சை எழுதினர். க.பொ.த (சா/த) 2019 தோற்றிய மாணவிகளுள் 177 பேர் தமிழ் மூலமும் 74 பேர் இரு மொழி மூலமும் பரீட்சைக்குத் தோற்றினர். பரீட்சைக்குத் தோற்றிய 251 மாணவிகளும் க.பொ.த உ/த கற்கத் தகுதி பெற்றுள்ளனர். மேலும் பரீட்சை எழுதிய 251 பேரும் கணிதப் பிரிவில் கற்கத் தகுதி பெற்றிருப்பது மகத்தான சாதனை. பரீட்சை எடுத்த சகலரும் கணிதத்தில் C யும் அதற்கு மேலான அடைவுகளைப் பெற்றுள்ளார்கள். விஞ்ஞான பாடத்தில் 18 பேர் S சித்தியையும் 4 பேர் சித்தி பெறாமையால் 22 பேர் விஞ்ஞானப் பிரிவில் கற்கும் தகுதியை இழந்துள்ளனர் என்பது கவலை தருகிறது.

பரீட்சை எடுத்த 251 பேரில் 188 பேர்5Aயும்அதற்கும்மேலான A சித்திகள் பெற்றிருக்கின்றார்கள். பரீட்சைக்குத் தோற்றிய மாணவிகளுள் 58 பேர் 9 பாடங்களிலும் A சித்திகளும் 36 பேர் 8 பாடங்களில் A சித்திகளையும் 36 பேர் 7 பாடங்களில் A சித்திகளையும் 21 பேர் 5 பாடங்களில் A சித்திகளையும் பெற்றுள்ளனர். இப்பாடசாலையில் க.பொ.த. (சா/து) பரீட்சார்த்தி ஒருவர் சராசரியாக 6 பாடங்களில் A சித்தி பெற்றுள்ளார்.

இவ்விடத்தில் யாழ்ப்பாணத்திலுள்ள 12 வலயங்களில் A சித்தி பெற்றவர்களின் எண்ணிக்கை பின்வருமாறு.

யாழ்ப்பாணம்-115, வடமராட்சி-53, வவுனியா தெற்கு-36, கிளிநொச்சி-27, மன்னார்-26, முல்லைத்தீவு-18, வலிகாமம்-33, தென்மராட்சி-13, மடு-01, துணுக்காய்-00, தீவுகள்-00, வவுனியா வடக்கு-00.

யாழ்ப்பாண வலயத்தில் பெற்ற 115A சித்திகளில் 58 வேம்படி மகளிர் கல்லூரியில் இருந்து பெறப்பட்டவை. இக்கல்லூரியில் பெறப்பட்ட A சித்தி எண்ணிக்கை யாழ்ப்பாணம் தவிர்ந்த எல்லா வலயங்களிலும் பார்க்க கூடுதலானது என்பது குறிப்பிடத்தக்கது.

க.பொ.த. (சா/த) பரீட்சைக்கு ஒவ்வொரு பரீட்சார்த்தியும் 9 பாடங்கள் எடுக்க முடியும். இதில் 6 பாடங்கள் கட்டாயமாக எடுக்க வேண்டிய பாடங்கள். மிகுதி 3 பாடங்கள் மூன்று பாடத் தொகுதிகளில் இருந்தும் ஒவ்வொரு பாடம் தெரிவு செய்யப்படவேண்டும். இப் பாடசாலையிலிருந்து க.பொ.த (சா/த) 2019 பரீட்சைக்கு 2257 பாட அலகுகளுக்கு தோற்றியுள்ளனர். ஒரு பரீட்சார்த்தி வர்த்தகமும் கணக்கியலுக்கும் இன்னொரு பரீட்சார்த்தி ஆங்கில இலக்கியத்திற்கும் தோற்றவில்லை.

(251×9= 2259-2=2257)

அட்டவணை-I

பரீட்சை எடுத்த பாட அலகுக

| தர அடிப்படையில் பாட அலகுகள் எண்ணிக்கையும் விகிதாசாரமும் | | | |
|---|---|---|---|
| | எண்ணிக்கை | விகிதம் | Cயும் அதற்கு மேலும் |
| A | 1535 | 68.0 | 97.8 |
| B | 396 | 17.6 | |
| C | 276 | 12.2 | |
| S | 44 | 1.9 | 1.9 |
| W | 06 | 0.3 | 0.3 |
| மொத்தம் | 2257 | 100.0 | 100.0 |

ளில் 97.8% C யும் அதற்கு மேற்பட்ட தரத்தைப் பெற்றுள்ளனர். ஆறு அலகுகளில் மாணவிகள் சித்தி பெறாதது கவலை தருவதாக உள்ளது. விஞ்ஞான பாடத்தில் பொதுவில் பெறுபேறு குறைவாக இருப்பது சற்றுப் பிரச்சினைக்குரியதாகவும் மாணவிகள் எதிர்பார்ப்புகளுக்கு தடையாக அமைந்துவிட்டது.

அட்டவணை-II

பாடரீதியாகப் பெறுபேறுகளை நோக்குமிடத்து சமயங்கள், தமிழ்மொழி, ஆங்கிலம், கணிதம், வரலாறு ஆகிய ஐந்து

| யாழ். வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை- பாடரீதியான அடைவு- க.பொ.த. (சா/த) 2019 | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| பாடம் | பாட. எண் | விண். எண் | தோற். எண் | A | B | C | S | W | சித்தி எண். | சித்தி விகி. |
| சைவநெறி | 12 | 224 | 223 | 203 | 10 | 09 | 01 | - | 223 | 100 |
| றோ.கத். | 14 | 24 | 24 | 23 | 01 | - | - | - | 24 | 100 |
| கிறிஸ்தவம் | 4 | 04 | 04 | 00 | 02 | 02 | - | - | 04 | 100 |
| தமிழ்மொழி | 22 | 252 | 251 | 109 | 106 | 35 | 01 | - | 251 | 100 |
| ஆங்கிலம் | 31 | 252 | 251 | 148 | 60 | 34 | 09 | - | 251 | 100 |
| கணிதம் | 32 | 252 | 251 | 212 | 19 | 20 | - | - | 251 | 100 |
| வரலாறு | 33 | 252 | 251 | 192 | 23 | 34 | 02 | 00 | 251 | 100 |
| விஞ்ஞானம் | 34 | 252 | 251 | 104 | 52 | 73 | 18 | 04 | 247 | 100 |
| 1ம் பா.தொ. | | | | | | | | | | |
| வர்த்தகமும் கணக்கியல் | 60 | 228 | 226 | 141 | 51 | 26 | 06 | 02 | 224 | 99 |
| புவியியல் | 61 | 21 | 21 | 16 | 02 | 03 | - | - | 21 | 100 |
| குடி. கல்வி | 62 | 02 | 02 | 01 | 01 | - | - | - | 02 | 100 |
| சிங்களம் (2ம்மொழி) | 64 | 01 | 01 | 01 | - | - | - | - | 01 | 100 |
| 2வது பா.தொ. | | | | | | | | | | |
| சங்கீதம் (கர்) | 42 | 57 | 57 | 50 | 04 | 03 | - | - | 54 | 100 |
| சித்திரம் | 43 | 06 | 06 | 02 | 04 | - | - | - | 06 | 100 |
| நாட்டியம் (பர) | 45 | 22 | 22 | 20 | - | 02 | - | - | 22 | 100 |
| ஆங். இல. | 46 | 57 | 55 | 21 | 15 | 18 | 01 | - | 55 | 55 |
| தமிழ்.இல. | 48 | 105 | 105 | 86 | 16 | 01 | 02 | - | 105 | 100 |
| நாட.அரங். | 51 | 05 | 05 | 05 | - | - | - | - | 05 | 100 |
| 3வது பா.தொ. | | | | | | | | | | |
| தகவல் தொடர்பாடல் | 80 | 229 | 228 | 183 | 25 | 16 | 04 | - | 228 | 100 |
| சுகா. உடற். | 86 | 23 | 03 | 18 | 05 | - | - | - | 23 | 100 |

கட்டாய பாடங்களில் சித்தி விகிதம் 100% ஆக இருக்கின்றது.

விருப்புப் பாடங்களான வர்த்தகம், கணக்கியல், புவியியல், குடியுரிமைக் கல்வி, சிங்களம், சங்கீதம் (கர்நாடகம்) சித்திரம், நாட்டியம் (பரதம்), ஆங்கில இலக்கியம், தமிழ் இலக்கியம், நாடக அரங்கியல், தகவலும் தொடர்பாடல் கற்கை, சுகாதாரமும் உடற் கல்வி ஆகிய பாடங்களில் 100% சித்தி பெறுபேறுகள் பெற்றுள்ளனர்.

விஞ்ஞானம்-98.4%, வர்த்தகமும் கணக்கியல் (99.1%) பாடங்களில் மாத்திரம் 100% குறைவாக இருப்பது பாடசாலையின் நற்பெயருக்கு பாதிப்பை ஏற்படுத்தலாம். வரும் வருடத்தில் இக் குறைபாடு நீக்கப்படவேண்டும்.

5 ஆம் ஆண்டு புலமைப் பரீட்சையில் சித்தியடைந்து கடின போட்டி மூலம் அனுமதி பெற்ற மீத்திறன் கொண்ட வேம்படி மாணவிகளின் உயர்வான பரீட்சைப் பெறுபேறுகளை சிலர் பெரிதாக எடுப்பதில்லை. கெட்டிக்கார மாணவிகளை எடுத்துக்கொண்டு நல்ல பெறுபேறுகள் பெறுவது பெரிய விடயமா? எனக் கேட்போரும் உளர்.

இம்மாணவிகள் பாடசாலையில் சேர்ந்து 6 வருடங்களின் பின்னரே க.பொ.த. (சா/த) பரீட்சைக்குத் தோற்றுகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. இந்த நீண்ட ஆறு ஆண்டுகளில் பாடசாலைக் கல்வி சரியாக முன்னெடுக்காதுவிடின் மாணவிகள் தங்கள் திறமைகளைக் காட்டியிருக்க முடியாது. இதனால் இந்த 6 ஆண்டுகளும் மாணவிகளைச் சரியாக வழிநடத்திய அதிபர், மிகுந்த சிரத்தையுடன் கற்பித்த வேம்படி ஆசிரியர்களின் பணியைக் குறைத்து மதிப்பிட முடியாது.

மேலும் வேம்படி மாணவிகளின் பெற்றோர் பொதுவில் தங்கள் பிள்ளைகளின் கல்வியில் மிகுந்த கரிசனையாக இருக்கின்றார்கள். மேலும் இப்பாடசாலையின் கல்விப் பாரம்பரியம், பாடசாலைச் சூழல், சிரேஷ்ட மாணவிகள், கீழ் வகுப்பு மாணவிகளின் கல்வி வளர்ச்சிக்கு கொடுக்கும் உதவிகள், ஊக்கங்கள், முன்னுதாரணங்கள் ஆகியன கற்றல் செயற்பாட்டுக்கு வலுச்சேர்க்கின்றன. சக மாணவர்களிடையே காணப்படும் போட்டியும் உயர் அடைவைப் பெறவேண்டும் என்ற முயற்சிகளும் உயர் பெறுபேறுகளைப் பெற உதவுகின்றன. மற்றும் பழைய மாணவிகள் சங்கம், பாடசாலை அபிவிருத்திச் சபையும் சிறப்பாகச் செயற்படுவதால் பாடசாலை மாணவிகளின் கற்றல் சமூக, பொருளாதார, உளவியல் மற்றும் தேவைகளைப் பூர்த்தி செய்யக் கூடியதாக இருக்கின்றது. இந்நிலையில் பழைய மாணவிகள் சங்கத்தைச் சேர்ந்த திருமதி சக்தி மகேஸ்வரன், திருமதி ஆனந்தகுமாரசுவாமி ஆகியோரின் பங்கு குறிப்பிடத்தக்கது. வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையின் உயர்வான பரீட்சைப் பெறுபேறுகளுக்கு பல்வேறு காரணிகள் பங்களிக்கின்றன.

சிறந்த பரீட்சைப் பெறு பேறுகளைப் பெற்ற பாடசாலை மாணவிகளுக்கு எமது வாழ்த்துக்களும் பாராட்டுக்களும். இது போல் சிறந்த முறையில் மாணவிகளை வழிநடத்திக் கற்பித்த வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை அதிபர் திருமதி சுனித்திரா சூரியராஜ், பிரதி அதிபர் சுமதி கந்தசாமி, உதவி அதிபர்கள் திருமதி லலிதாம்பிகை மகேஸ்வ ரன், திருமதி அன்பரசி கணேசலிங் கம் மற்றும் ஆசிரியர்களுக்கும் எமது வாழ்த்துக்களும் பாராட்டுக்களும்.

இப்பாடசாலை வருங்காலத்திலும் தமிழ்ப் பெண்களின் கல்வி வளர்ச்சிக்கு கடந்த 175 ஆண்டுகளுக்கு மேலாக ஆற்றிய பங்களிப்பை விட மேலும் கூடுதலான பங்கை ஆற்ற வேண்டும் என்பதே தமிழ் மக்களின் குறிப்பாக யாழ்ப்பாண மக்களின் விருப்பாகும். இப்பாடசாலை மக்களின் விருப்பை நிறைவேற்றும் என்பது திண்ணம்.

# நிதி நிர்வாகம் பசில் வசம்

# மீண்டும் குடும்ப ஆட்சி

## சம்பிக்க குற்றச்சாட்டு



(கொழும்பு)

பாராளுமன்றத்தின் ஆயுட் காலம் முடிவதற்கான காலம் இருக்கின்ற நிலையில் பாராளுமன்றத்தைக் கலைத்து, பொதுத் தேர்தலை நடத்த எடுத்த தீர்மானத்தின் ஊடாகவே அரசியலமைப்பு மீறப்பட்டுள்ளது. இந்நிலையில் தொடர்ந்து அரசியலமைப்புக்கு புறம்பாக செயற்படாமல் உடன் பாராளுமன்றத்தைக் கூட்டுமாறு முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க கோரிக்கை விடுத்தார்.

இதேவேளை அரசாங்கம் பாராளுமன்றத்தை கலைத்து விட்டு நிதி தொடர்பான செயற்பாடுகளை கட்சியின் அமைப்பாளர் பசில் ராஜபக்ஷவுக்கு கையளித்து கடந்தகால குடும்ப ஆட்சியையே மேற்கொண்டு வருவதாகவும் அவர் குற்றம்சாட்டினார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று ஞாயிற்றுக் கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தேர்தல் தொடர்பில் தோற்றம் பெற்றுள்ள நெருக்கடி நிலைமைக்கு அரசாங்கமே பொறுப்புக் கூற வேண்டும். பாராளுமன்றத்தின் காலம் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் முதலாம் திகதியே முடிவடையவிருந்தது.

இதற்கமைய பாராளுமன்றத்தை கலைத்திருந்தால் ஒக்டோபர் மாதம் தேர்தலை நடத்த முடிந்திருக்கும். இந்த நெருக்கடிக்கு மத்தியில் யார் பொதுத் தேர்தலை நடத்தத் தீர்மானம் எடுக்கச் சொன்னது.

அரசாங்கமே தேர்தல் தொடர்பில் நெருக்கடியை தோற்றுவித்துள்ளது. பாராளுமன்றத்தை மார்ச் மாதம் கலைத்தால் ஜூன் 2 ஆம் திகதிக்கு முன்னர் தேர்தலை நடத்த வேண்டும். தற்போது அதுவும் நடைபெறவாய்ப்பில்லை.

இதன் காரணமாகவும் அரசியலமைப்பு மீறப்பட்டுள்ளது. இதனால் அந்த வர்த்தமானி அறிவித்தல் தொடர்பிலும் தற்போது சிக்கல் நிலைமை தோற்றம் பெற்றுள்ளது.

பொதுத் தேர்தலுக்கான வேட்பு மனுத்தாக்கல் செய்யப்பட்ட காலப் பகுதியில் வைரஸ் பரவல் அதிகரித்திருந்தமையால், மூன்று நாட்கள் அரச விடுமுறை அறிவிக்கப்பட்டது.

இந்தக் காலப்பகுதியிலே வேட்பு மனுத் தாக்கல் செய்யப்பட்டது. தற்போது இந்த வேட்பு மனு செல்லுபடியாகுமா? என்பது தொடர்பிலும் சந்தேகம் எழுந்துள்ளது. வைரஸ் பரவல் நெருக்கடிக்கு மத்தியில் தேர்தலை நடத்துவதால் தேர்தல் சட்டங்களை ஒழுங்கான முறையில் நிறைவேற்றுவதிலும் சிக்கல் ஏற்பட்டுள்ளது.

தேர்தல் சட்டத்தில் வாக்காளரின் விரலில் மை பூச வேண்டும். அதனை இந்த வைரஸ் தொற்றுக்கு மத்தியில் செயற்படுத்த முடியுமா? இதனால் தேர்தலை நடத்துவதென்றால் தேர்தல் சட்டத்தையும் திருத்தம் செய்ய வேண்டும் என்பதை தேர்தல்கள் ஆணைக்குழுவும் ஏற்று உணர்ந்து கொண்டுள்ளது.

ஊரடங்குச் சட்டம் அமுல் படுத்தப்பட்டுள்ளது. மக்கள் மத்தியில் இடைவெளியைப் பேணுவதன் ஊடாக வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்தலாம் என்பதற்காகவே நாங்கள் அதனை ஏற்றுக் கொண்டிருந்தோம். ஆனால் ஊரடங்குக்கென்று தனிச்சட்டம் இருக்கின்றது. இந்நிலையில் இதனூடாகவும் அரசியலமைப்பு மீறப்பட்டுள்ளது.

மே முதலாம் திகதியிலிருந்து அரச நிதி ஒதுக்கீடுகளை மேற்கொள்வதற்கும் சிக்கல்கள் காணப்படுகின்றன. பாராளுமன்றத்தைக் கலைத்ததற்கு பின்னர் மூன்று மாதங்களுக்கான 7200 பில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

ஜனாதிபதியால் பாராளுமன்றம் கலைக்கப்பட்டால், புதிய பாராளுமன்றம் கூட்டப்பட்டு மூன்று மாதங்களுக்குப் பின்னரே நிதி ஒதுக்கீடு செய்ய முடியும். இதுவே 153 சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. பாராளுமன்றத்தைக் கலைத்துவிட்டு அனைத்துப் பொறுப்புக்களையும் பசில் ராஜபக்ஷவுக்குப் பெற்றுக் கொடுத்துள்ளனர்.

அமைச்சரவைக்கும் தற்போது அனுமதியில்லை. நீதியற்ற முறையில் அரசியலமைப்பை மீறிச் செயற்பட்டு வருகின்றனர். பாராளுமன்றத்தைக் கூட்ட வேண்டாம். பாராளுமன்றம் கூடி மருந்து கண்டு பிடிக்கவா? என கேள்வி எழுப்பி பாராளுமன்றம் கூடுவதை நிராகரித்தனர். பின்னர் அனைத்து முதலீடுகளையும் முகாமைத்துவம் செய்ய தமது உறவினர் ஒருவருக்கு ஒப்படைத்துள்ளனர்.

பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரையும் அலரி மாளிகைக்கு அழைத்துள்ளனர். இதற்கு முன்னரும் இவ்வாறு அழைப்பு விடுத்திருந்த போது நாங்கள் சென்றோம்.

இதன்போது ஜனாதிபதி மற்றும் பிரதமருடன் சந்திப்புக்கள் இடம்பெற்ற போது, நாங்கள் முன்வைத்த கோரிக்கைகள் எதுவுமே நிறைவேற்றப்படவில்லை.

இதன்போது வைரஸ் தொற்றைக் கண்டறிவதற்கான பரிசோதனையை அதிகரிக்குமாறு கேட்டுக் கொண்ட போது அதனை ஒருபோதும் நிறைவேற்றவில்லை. இந்நிலையில் நாங்கள் எதற்கு அங்கு செல்ல வேண்டும். அதனாலேயே செல்வதில்லை என்ற தீர்மானத்தை எடுத்தோம்.

பாராளுமன்றத்தை கூட்டுவதால் அனைத்துச் சிக்கல்களுக்கும் தீர்வு காண முடியும். தொற்று நோய் பரவல் காலங்களில் செயற்படும் விதம் தொடர்பான புதிய சட்டங்களை அமுல்படுத்தல், முறையான நிதி ஒதுக்கீடுகளை மேற்கொள்ளல் போன்ற செயற்பாடுகளை முன்னெடுக்க முடியும்.

பாராளுமன்றத்தைக் கலைத்துவிட்டு முறையற்ற ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. இது தொடர்பில் எதிர்க்கட்சி கேள்வி எழுப்பும் என்றே பாராளுமன்றத்தை கூட்டுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றனர். இவர்கள் 2015 ஆம் ஆண்டுக்கு முன்னர் முன்னெடுத்த குடும்ப ஆட்சியையே மீண்டும் செயற்படுத்தி வருகின்றனர் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# 208 பேர் நேற்றுக் காலை நாடு திரும்பினர்



(கொழும்பு)

லண்டனிலிருந்து 208 இலங்கையர்கள் விசேட விமானம் மூலம் நேற்றுக் காலை அழைத்து வரப்பட்டனர்.

ஶ்ரீலங்கன் விமான சேவைக்குச் சொந்தமான விசேட விமானத்தின் மூலம் கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு நேற்றுக் காலை இவர்கள் அழைத்து வரப்பட்டனர்.

இதேவேளை, வெளிநாடுகளிலிருந்து வருவோர் அவர்களின் வசதிகளுக்கேற்ப சில ஹோட்டல்களில் தங்கி தனிமைப்படுத்திக் கொள்ளலாம் என இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவித்தார்.

அரசு அல்லது இராணுவத் தலையீடு இன்றி நேரடியாகவே அவர்கள் ஹோட்டல்களுக்கான கட்டணத்தைச் செலுத்தி தங்கிக் கொள்ளலாம் எனவும் அவர் தெரிவித்தார். (இ-7)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## முட்டாள்கள்!

முட்டாள்களிலே மூன்று வகையுண்டு! அப்படி என்கிறார் ஒரு பெரியவர். அது எப்படி? முதல் வகை முட்டாள்கள் எப்படி என்றால் அவர்களுக்கு உண்மையிலேயே ஒன்றும் தெரியாது. அது மட்டுமில்லாமல் தனக்கு ஒன்றுமே தெரியாது என்பது கூட அவர்களுக்குத் தெரியாது. மிகவும் அப்பாவிகள். இது சாதாரண வகை.

இரண்டாவது வகை எப்படி என்றால் இவர்களுக்கு எதுவுமே தெரியாது. அதே சமயம் தெரிந்த மாதிரிக்காட்டிக் கொள்ளத் தெரியும். சங்கீதம் என்றால் என்ன என்றே தெரியாது. ஆனால் முதல் வரிசையிலே உட்கார்ந்து கொண்டு தெரிந்தது போல் தலையை ஆட்டிக் கொண்டு இருப்பார்கள் ஒன்றுமே தெரியாமல். ஆனால் தெரிந்தது மாதிரிக் காட்டிக் கொள்கின்ற இந்த இரண்டாவது வகை ஆசாமிகள் இருக்கிறார்கள் பாருங்கள், அவர்கள் எல்லாம் கொஞ்சம் படித்த முட்டாள்கள்.

மூன்றாவது வகை முட்டாள்கள் எப்படி என்றால் தனக்கு ஒன்றுமே தெரியாது என்பது அவர்களுக்கு மட்டும் தான் தெரியும். இவர்களே ஆசீர்வதிக்கப்பட்டவர்கள்! தான் ஒரு பூச்சியம் என்பது அவர்களுக்குத் தெரியும். நமக்குத் தெரியாது! நாம் அவர்களைப் பெரிய அறிவாளிகள் என்று மனப்பூர்வமாக நினைத்துக் கொண்டிருப்போம். பாமரர்கள், படித்தவர்கள், பெரிய மனிதர்கள் இவர்களுக்கு மத்தியிலே இந்த மூன்று வகையான ஆசாமிகளையும் இன்றைக்கு சர்வ சாதாரணமாக நாம் கண்டு பிடிக்கலாம். ஆனால் அப்படிக் கண்டு பிடிப்பதற்கு நமக்கு கொஞ்சம் புத்திசாலித்தனம் வேண்டும்.

இந்த் உலகத்திலே ஒவ்வொருத்தரும் முதலிலே சாதரண முட்டாளாகத்தான் பிறக்கின்றார்கள். அவர்களுக்கு எதுவும் தெரியாது. தனக்கு எதுவும் தெரியாது என்பதுவும் அவர்களுக்கு தெரியாது. ஆகையினாலே அதெல்லாம் முதல் வகையைச் சேர்ந்தது தான். அதற்குப் பின் வளர வளர உலக விடய ஞானம் என்கின்ற பழத்தை உண்ண வேண்டியிருக்கு . விடயங்களை தெரிந்து கொள்ள வேண்டியிருக்கின்றது.

எளிமையான முட்டாள் தனத்திலிருந்து அறிவுள்ள முட்டாள் தனத்துக்கு ஒரு குழந்தை படிப்படியாக மாறுகிறது. பெரியவன் ஆக ஆக சில பேர் தெரியாததை தெரிந்தது போல் காட்டிக் கொள்கின்றனர். சில பேர் தனக்குத் தெரியாது என்பதை மற்றவர்களுக்குத் தெரிந்திடாமல் பார்த்துக் கொள்கின்றார்கள். தாம் தனது என்கின்ற அகங்காரத்தின் உச்சிக்குச் செல்லும் போது ஒரு நாள் விழிப்பு நிலையிலே எல்லாவற்றையும் ஒழித்துவிட்டு ஒன்றுமே இல்லாத தன்மையை அடைய வேண்டும். மனதில் இயங்கும் போது ஒருவன் உணர்வில் இயங்குவான். இது தான் அவனை ஞானத்தன்மைக்கு அழைத்துக் கொண்டு போகும் என்கிறார் ஓஷோ.

நண்பர் ஒருத்தர் ஒரு கதை சொன்னார். பெரிய மனிதன். அவருக்கு ஒரு வேலைக்காரன். அந்த வேலைகாரன் எதையும் சரியாகப் புரிந்து கொண்டு வேலை செய்வதில்லை. அதனாலேயே அந்தப் பெரிய மனிதன் என்ன செய்தார் என்றால், ஒரு அட்டையிலே முட்டாள் என்று எழுதி அந்த அட்டையை அவன் கழுத்திலே மாட்டிவிட்டார். அவனும் அதைப்பற்றி கவலைப் படவில்லை. அப்படியே வைத்துக் கொண்டான்.

ஒரு நாள் அந்தப் பெரிய மனிதன் வயதாகி இறக்க கிடக்கின்றார். இந்த வேலைக்காரன் அவரிடம் போய் நின்றான். "இதோ பாரப்பா இனிமேலாவது நீ புத்திசாலியாக இரு. நான் போய் வருகின்றேன்!" என்றார்."எங்கே போகின்றீர்களய்யா?" என்று கேட்டான் அவன். "திரும்பி வரமுடியாத இடத்திற்குப் போகிறேன்" என்றார்.

"அந்த இடம் எங்கே இருக்கு ?" என்றான். "எனக்குத் தெரியாது" என்றார். "அது எவ்வளவு தூரத்திலே இருக்கு?" என்றான். "அதுவும் எனக்குத் தெரியாது" என்றார்.

"காரை எடுத்துக் கொண்டு போகலாமா? " என்றான். "முடியாது" என்றார். "ஆனால் போறது மட்டும் நிச்சயமா?" என்றான். "ஆமாம்" என்றார். இப்ப அந்த வேலைக்காரன் சொன்னான்.

"ஐயா எங்கே போவது என்றும் தெரியவில்லை. வழியும் தெரியவில்லை. எவ்வளவு தூரம் என்றும் தெரியவில்லை. வண்டியிலே போவதா, காரிலே போவதா? என்றும் தெரியவில்லை. ஆனால் போகப் போவது மட்டும் நிச்சயம் என்று சொல்கின்றீர்கள். அதனாலே என்னை விட உங்களுக்குத் தான் பொருத்தும் என்று தன் கழுத்திலே இருந்த "முட்டாள்" என்கின்ற அட்டையை எடுத்து தன்னுடைய முதலாளி கழுத்திலே மாட்டி விட்டான்.!"

உன்னிடம் யாராவது ஒரு தடவை மோசடி செய்தால், அது அவன் தவறு. அவனே மறுதடவை மோசடி செய்தால் அது உன் தவறு. - ருமேனிய பழமொழி

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## நோக்கம் இல்லாத முடிவுகளால் தமிழருக்கு என்ன இலாபம்

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களுடன் நேற்றைய தினம் (04.05.2020) சந்திப்பொன்றை நடத்துவதற்கான அழைப்பை பிரதமர் மகிந்த ராஜபக்ஷ விடுத்திருந்தார்.

இந்தச் சந்திப்பு கலைக்கப்பட்ட பாராளுமன்றத்தை மீளக் கூட்டுவதற்கானதல்ல. மாறாக தேர்தலை நடத்துவதற்கானது.

எனினும் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவின் அழைப்பை ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி, ஜே.வி.பி ஆகியன நிராகரித்து விட்டன.

தேர்தலை நடத்துவதற்காக அழைக்கப்படுகின்ற இக்கூட்டத்தில் கலந்து கொள்ள முடியாது என்பது சந்திப்பை நிராகரித்த கட்சிகளின் கருத்து.

நிலைமை இதுவாக இருக்கையில், மேற்படி சந்திப்பில் கலந்து கொள்வதென கூட்டமைப்பு முடிவு செய்தது.

கூட்டமைப்பின் இந்த முடிவு பலருக்கும் அதிர்ச்சியளித்தது.

பரவாயில்லை, பிரதமர் மகிந்த ராஜபக்ஷ அழைத்த கூட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கலந்து கொள்ளக்கூடாது என்று எந்தக் கட்டுப்பாடும் இல்லை.

ஆனால் கூட்டமைப்பின் விசுவாசத்துக்குரிய ஐக்கிய தேசியக் கட்சி கலந்து கொள்ளாத கூட்டத்தில், கடந்த ஜனாதிபதித் தேர்தலில் கூட்டமைப்பு ஆதரித்து நின்ற சஜித் பிரேமதாஸ தரப்பு கலந்து கொள்ளாத நிலையில்,

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கலந்து கொண்டது எனில், அதற்கான காரணம் என்ன? அந்தச் சந்திப்பில் பிரசன்னமாக இருப்பதன் மூலம் கூட்டமைப்பு எதைச் சாதிக்க நினைத்தது? அந்த நினைப்பை சாதிக்க முடிந்ததா? எனப் பல் வினாக்கள் எழுகை பெறும்.

இந்த வினாக்களுக்கு கூட்டமைப்பு எந்தப் பதிலையும் தரும் பட்சத்தில்,

அப்படியானால், ரணிலை விலக்கி மகிந்தவைப் பிரதமராக்கியபோது நீங்கள் நீதிமன்றம் போகாமல் இருந்திருக்கலாமே அல்லது நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தலில் எவரையும் பெயர் குறிப்பிட்டு ஆதரிக்காமல்; தமிழ் மக்கள் தீர்மானிப்பர் என்று நீதியரசர் சி.வி. விக்னேஸ்வரன் கூறிய நிலைப்பாட்டில் நீங்களும் இருந்திருக்கலாமே.

அப்போது கிடைத்த அருமந்த சந்தர்ப்பங்களையெல்லாம் பக்குவமாகக் கையாளாமல் பதறிக் கெடுத்து விட்டு,

இப்போது பிரதமர் மகிந்த ராஜபக்ஷ அழைத்த கூட்டத்துக்கு நீங்கள் சென்றீர்கள் என்றால்,

நல்ல பிள்ளைக்கு நடிப்பதைத் தவிர, உங்களிடம் தமிழ் மக்கள் சார்ந்த இலக்குகள், நோக்கங்கள் எதுவும் இல்லை என்பது திட்டவட்டமாகத் தெரிகிறது.

அதுமட்டுமன்றி, நீங்கள் ஆதரித்த ஐக்கிய தேசியக் கட்சியின் யானை தன் தலையில் மட்டுமல்ல உங்கள் தலையிலும் மண்ணைக் கொட்டிவிட்டது என்பதை இப்போது நீங்கள் உணர்கிறீர்கள் என்பதும் தெரிய வருகிறது.

# உத்தியோகபூர்வமற்ற சந்திப்புக்களால் எந்தப் பயனும் கிடைக்கப் போவதில்லை

## குமார வெல்கம தெரிவிப்பு

(கொழும்பு)

உத்தியோகபூர்வமற்ற சந்திப்புகளால் எந்தப்பயனும் கிடைக்கப்போவதில்லை. அதனாலேயே பிரதமரின் அழைப்பை நிராகரித்ததாக தெரிவித்த முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம, ராஜபக்ஷக்களின் செயற்பாடுகள் தொடர்பில் தான் நன்கு அறிந்தவர் என்றும், நெருக்கடியின் மத்தியிலும் பெரும்பான்மையை பெற்றுக் கொள்வதற்கே முயற்சிக்கின்றனர் என்றும் குற்றம் சாட்டினார்.

எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் நேற்று திங்கட்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது,

அலரி மாளிகையில் இதற்கு முன்னர் மேற்கொள்ளப்பட்ட இரண்டு கலந்துரையாடல்களிலும் ஐக்கிய மக்கள் சக்தி இணைந்துக் கொண்டிருந்ததுடன், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவுடன் கலந்துரையாடல்களில் ஈடுபட்டதுடன், கொரோனா வைரஸ் பரவலை கட்டுப்படுத்துவதற்காக எடுக்கப்பட வேண்டிய சில செயற்பாடுகள் தொடரபிலும் அவர்களை தெளிவுபடுத்தியிருந்தோம்.

ஆனால் இந்த விடயங்கள் தொடர்பில் அவர்கள் துளியேனும் அவதானம் செலுத்தவில்லை. இவ்வாறான நிலையில் பிரதமரின் அழைப்பை ஏற்று மீண்டும் அலரிமாளிகைக்கு செல்வதால் எந்தப் பயனும் கிட்டப் போவதில்லை.

அரசாங்கத்தின் பலம் தொடர்பிலும் தற்போது சிக்கல் எழுந்துள்ளது. மார்ச் மாதம் பாராளுமன்றம் கலைக்கபபட்டதையடுத்து அரசாங்கத்தால் ஏப்ரல் மாதம் 30 ஆம் திகதிக்கு பின்னர் எந்த விதமான நிதி ஒதுக்கீட்டையும் முன்னெடுக்க முடியாது. அவ்வாறு செயற்படுவதானது அரசியலமைப்பை மீறி முன்னெடுக்கும் செயற்பாடுகளாகும். அரசியலமைப்புக்கு அமைவாகவா அரசாங்கம் செயற்பட்டு வருகின்றது என்றும் சந்தேகம் எழுந்துள்ளது.

ராஜபக்ஷர்களின் பதவி மோகம் மற்றும் மோசடி செயற்பாடுகள் தொடர்பில் நான் நன்கறிவேன். 52 நாட்கள் அரசியல் நெருக்கடியின போது முன்னாள ஜனாதிபதியால் வழங்கப்படும் பிரதமர் பதவியை பொறுப்பேற்க வேண்டாம் என்று பிரதமர் மகிந்த ராஜபக்ஷவுக்கு எவ்வளவோ எச்சரிக்கை செய்த போதும் பதவி மோகத்தில் அவர் அதனை பொறுப்பேற்றார். பின்னர் நீதிமன்றத்தின் தலையீட்டின் காரணமாக அந்தப் பதவியை விட்டு விலகினார்.

பாராளுமன்றத்தை கலைத்து விட்டு இவர்கள் இந்த நெருக்கடி நிலைமையிலும் தேர்தலை நடத்துவதற்கும், மூன்றில் இரண்டு பெரும்பானமையைப்பெற்றுக்கொள்வது தொடர்பிலுமே சிந்தித்து வருகின்றனர். கொரோனா தொற்று தொடர்பான நெருக்கடி நிலைமைத் தொடர்பில் உலக சுகாதார ஸ்தாபனம் எச்சரிக்கை விடுத்திருந்த போதிலும் அதனை இலங்கைக்குள் வராமல் தடுப்பதற்காக எந்தவித முயற்சிகளும் எடுக்கப்படவில்லை. பாராளுமன்றத்தை கூட்டுமாறு கோரிக்கை விடுக்கப்படுகின்ற போதிலும், அலரிமாளிகையில் இடம்பெறும் உத்தியோகபூர்வமற்ற சந்திப்புகளால் நாட்டுக்கு பயன்தரும் எந்த செயற்பாடுகளும் முன்னெடுக்கப்படப் போவதில்லை.

இதேவேளை அரசாங்கம் கொரோனா பரவல் தொட ர்பில் வெளியிடும் தகவல்கள் மற்றும் தரவுகள் தொடர்பி லும் எமக்கு சந்தேகம் எழுந்துள்ளது. நாட்டின் பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் ஜனாதிபதி, பிரதமர் உள்ளிட்ட தரப்பினர் இணைந்து கலந்துரையாடி ஒன்றிணைந்து செயற்படுவதன் ஊடாகவே கொரோனா வைரஸ் பரவலை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முடியும் என்று உலக சுகாதார ஸ்தாபனத்தின் பொதுச் செயலாளரும் தெரிவித்துள்ளார் என்பதையும் சுட்டிக்காட்டினார். (ஐ)

# கொரோனா தொடர்பில் பெரியவர்களின் பதற்றம் குழந்தைகளையும் சிறுவர்களையும் பாதிக்கும்

## உளநல மருத்துவ நிபுணர் சிவதாஸ் சுட்டிக்காட்டு

(குப்பிழான்)

கொரோனாத் தொற்றுத் தொடர்பில் பெரியவர்கள் பதற்றமடையும் போது அது குழந்தைகளையும், சிறார்களையும் பாதிக்கும். பொதுவாகவே இரண்டு வயதுக்கு மேற்பட்ட குழந்தைகளுக்குப் பெற்றோர்கள் பதற்றமடைந்தால் அதனைக் கிரகிக்கும் ஆற்றல் உள்ளது. பெற்றோர்கள் முதலில் பதற்றப்படாமலிருப்பதன் மூலம் பிள்ளைகளைப் பாதுகாக்க முடியுமென உளநல மருத்துவ நிபுணர் டாக்டர் சிவசுப்பிரமணியம் சிவதாஸ் தெரிவித்தார்.

"கொரோனாவும் சிறுவர் உளவியலும்" தொடர்பில் கருத்துத் தெரிவித்த போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

பொதுவாகவே சிறுவர்களுக்கு ஊரடங்கு என்கிற விடயம் புதிதாகத் திடீரென்று வந்ததாகவேயுள்ளது. சிறார்களுக்குத் தங்களது பிரச்சினைகள் தொடர்பில் வாரத்தைப்படுத்துவது கஷ்டமாகவிருக்கும். நாங்களும் தெளிவில்லாமல் சொன்னால் விளங்கக் கடினமாக விருக்கும். இதனால், பெற்றோர்கள் சரியான தெளிவுடன் இந்த நிலைமையைப் பிள்ளைகளுக்கு விளங்கப் பட்டுத்த வேண்டும்.

தொடர்ந்து வீட்டுக்குள் முடங்கிக் கிடக்கும் பிள்ளைகள் சலிப்படைகிறார்கள். இதனால், பெற்றோர்களுக்கும், பிள்ளைகளுக்கும் இடையே மோதல் ஏற்படுகினறது. எனவே, சலிப்படையாமல நாட்களைக் கொண்டு போவதற்குரிய சரியான நேரத் திட்டமிடலை மேற்கொள்ள வேண்டும். உடற் பயற்சிகளோடு மனதை ஒருங்கமைக்கும் பயிற்சிகளையும் மேற்கொள்வது அவசியமானதாகும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ஐ-18)

## வாழ்வைப் பொன்னாக்கும் வைர வரிகள்

**மதியை இழந்தோர் இறைவனை அடையமாட்டார்கள். அறிவின் மூலமே இறைவன் உள்ளும் புறமும் மெய்த்துணையாய் இருப்பதை உணர முடியும். -தம்மபதம்**

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை புதன் கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணி வரை

**யாழ்.பிரதேசத்தில்** நாவற்குழி, கோகிலாக் கண்டி, தச்சன்தோப்பு, மறவன்புலவு, தனங்கிளப்பு, அறுகுவெளி, லிங் ரெடி மிக்ஸ் பிறைவேற் லிமிற்ரெட், அராலிப் பிரதேசம், செட்டியார்மடச் சந்தி, கரம்பிட்டி பிள்ளையார் ஆலயம், அராலி ஐயனார் கோவி லடி, அராலி கொலனி, அராலி சரஸ்வதி பாடசாலை இடங்களிலும்

**வவுனியா பிரதேசத்தில்** மருதோடை, நம்பன் குளம், நாவற்குளம், துட்டுவாகை, முகத்தான்குளம் 2வது பண்ணை ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும்.

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

### பற்றின்மையே முக்திக்கு வழி



நமது செயல்களைத் தூண்டுவதற்கு இரண்டு சக்திகள் உள்ளன. ஒன்று நாமே காண்பது, இரண்டு பிறருடைய அனுபவம். இந்த இரண்டு சக்திகளும் நமது மனமாகிய குளத்தில் பல்வேறு அலைகளை எழுப்புகின்றன. இந்த சக்திகளை எதிர்த்தும் போராடி, மனதை அடக்கி வைக்கும் ஆற்றலபற்றின்மைக்கு உண்டு. அத்தகைய பற்றின்மையே நமக்கு வேண்டும்.

நான் ஒரு தெருவழியே சென்று கொண்டிருக்கின்றேன். ஒருவன் வந்து என் கைக் கடிகாரத்தைப் பிடுங்கிச் சென்று விடுகிறான். இது எனது சொந்த அனுபவம். நான் அதைப் பார்க்கிறேன். உடனே அது என் சித்தத்தைக் கோப வடிவ அலையாக எழுப்புகிறது. அதனை எழ விடாதீர்கள். அதை உங்களால் தடுக்க முடியாவிட்டால் நீங்கள் ஒன்றுக்கும் உதவாதவர்கள். தடுக்க முடியுமென்றால் உங்களிடம் வைராக்கியம் உள்ளது. பற்றின்மை உள்ளது.

இனி, உலகியல் மனிதர்களைப் பார்க்கும் போது புலனின்பங்களே மிக உயர்ந்த இலட்சியம் என்று நமக்குப் படுகிறது. இவை பலமான கவர்ச்சிகள். இவற்றை மறந்து விட்டு, மனம் அந்த ஆசை வடிவான விருத்தியாக எழாமல் அடக்குவது வைராக்கியம்.

நமது அனுபவங்கள் மற்றும் பிறருடைய அனுபவங்களால் வரும் இரண்டுவிதத் தூண்டு சக்திகளையும் அடக்கி, அவை சித்தத்தை ஆளாதபடி செய்வது பற்றின்மை. நாம் அடக்க வேண்டுமே தவிர, அவை நம்மை அடக்கக்கூடாது. இத்தகைய மனவலிமையே பற்றின்மை. பற்றின்மை ஒன்றே முக்திக்கு வழி.

# வெனிசுவெலா சிறையில் கலவரம் உயிரிழப்பு 46 ஆக அதிகரிப்பு

(கராகஸ்)

வெனிசுவெலா சிறையில் நிகழ்ந்த கலவரத்தில் உயிரிழுந்தவர்களின் எண்ணிக்கை 46 ஆக அதிகரித்துள்ளது.

எண்ணெய் வளம் மிக்க தென்னமெரிக்க நாடான வெனிசுவெலாவில் ஒருபுறம் அரசியல் குழப்பமும் மறுபுறம் பொருளாதார நெருக்கடியும் நீடிக்கிறது. அந்த நாட்டில் உள்ள அனைத்து சிறைகளிலும் அளவுக்கு அதிகமான கைதிகள் அடைத்து வைக்கப்பட்டனர். இதனால் சிறைகளில் அடிக்கடி கலவரம் ஏற்பட்டு




வருகிறது. இந்த நிலையில் தலைநகர் கராகஸில் இருந்து 450 கி.மீ. தொலைவில் உள்ள குவானாரேயில் அமைந்துள்ள லாஸ் லானோஸ் சிறையில் நேற்று முன்தினம் கைதிகள் திடீர் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தங்களுக்கு உணவு வழங்க தங்களின் உறவினர்களை சிறைக்குள் அனுமதிக்க வேண்டும் என வலியுறுத்தி கைதிகள் இந்த போராட்டத்தில் ஈடுபட்டனர். அமைதியாக ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்றுக் கொண்டிருந்த போராட்டத்தில் திடீரென வன்முறை வெடித்தது. கைதிகள் சிறைக்காவலர்களையும் அதிகாரிகளையும் சரமாரியாக தாக்கினர். இதனால் அங்கு கலவரம் மூண்டது.

அதனைத் தொடர்ந்து, கலவர தடுப்பு பொலிஸாரும் பாதுகாப்புப் படைவீரர்களும் சிறைக்கு வரவழைக்கப்பட்டனர். அவர்கள் மீது துப்பாக்கிச்சூடு நடத்தி கலவரத்தைக் கட்டுக்குள் கொண்டு வந்தனர். எனினும் இந்தக் கலவரத்தில் கைதிகள் மற்றும் சிறைக்காவலர்கள் உட்பட 46 பேர் கொல்லப்பட்டனர். மேலும் 50 இற்கும் மேற்பட்டோர் படுகாயம் அடைந்தனர். (ஜ-2)

## பயங்கரவாதிகள் தாக்குதல் ஐந்து பேர் வீர மரணம்!



(காஷ்மீர்)

வடக்கு காஷ்மீரில் பயங்கரவாதிகள் நடத்திய துப்பாக்கிச்சூட்டில் கேணல் மேஜர், பொலிஸ் உட்பட ஐந்து பேர் வீர மரணம் அடைந்தனர்.

காஷ்மீர் மாநிலத்தில் பயங்கரவாதிகள் எல்லை வழியாக ஊடுருவி இந்திய பாதுகாப்பு வீரர்கள் மீது தாக்குதல் நடத்தி வருகிறார்கள். இந்திய இராணுவ வீரர்களும் பதிலடி கொடுத்து வருகிறார்கள்.

வடக்கு காஷ்மீர் குப்வாரா மாவட்டத்தில் உள்ள ஹந்த்வாரா சங்கிமுல்லா என்ற இடத்தில் பயங்கரவாதிகள் வீட்டிற்குள் நுழைந்து அங்குள்ளவர்களை பிணைக்கைதிகளாக பிடித்து வைக்க திட்டமிட்டுள்ளதாக இராணுவத்தினருக்கு இரகசியத் தகவல் கிடைத்தது.

உடனே உள்ளூர் பொலிஸார் துணையுடன் இராணுவத்தினர் சம்பவ இடத்திற்கு விரைந்தனர். அப்போது பயங்கரவாதிகள் இராணுவ வீரர்களை நோக்கி துப்பாக்கிச்சூடு நடத்தினர். அதற்கு இந்திய இராணுவ வீரர்களும் பதிலடி கொடுத்தனர். இதில் இரண்டு பயங்கரவாதிகள் சுட்டு வீழ்த்தப்பட்டனர்.

அதேசமயம் இந்திய இராணுவத்தைச் சேர்ந்த கேணல், மேஜர், இரண்டு வீரர்கள் மற்றும் காஷ்மீர் பொலிஸ் ஒருவர் என ஐந்து பேர் வீர மரணம் அடைந்தனர். (ஜ-2)

## ஊரடங்கு உத்தரவு தளர்த்தப்பட்டதால் மதுக்கடைகளில் குவிந்த மதுப்பிரியர்கள்

(பெங்களூர்)

ஊரடங்கு உத்தரவு தளர்த்தப்பட்டதையடுத்து 47 நாட்களுக்குப் பிறகு மதுக்கடைகள் திறக்கப்பட்டன. இதனால் மதுப் பிரியர்கள் உற்சாகமடைந்தனர்.

கொரோனா வைரஸைக் கட்டுப்படுத்துவதற்காக நாடு முழுவதும் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. இதில் மூன்றாம் கட்ட ஊரடங்கின் புதிய வழிகாட்டு நெறிமுறைகள் நேற்று முதல் அமுலுக்கு வந்துள்ளன. அதன்படி, டில்லி, மகாராஷ்டிரா, கர்நாடகா, ஆந்திரா மற்றும் கோவாவில் 47 நாட்களுக்குப் பிறகு மதுக்கடைகள் திறக்கப்பட்டன. சில கட்டுப்பாடுகளுடன் கடைகளைத் திறக்க அனுமதி




அளிக்கப்பட்டுள்ளது.

மதுக்கடைகள் திறக்கப்பட்டதால் மதுப் பிரியர்கள் உற்சாகம் அடைந்துள்ளனர். ஊரடங்கால் மது குடிக்க முடியாமல் தவிப்பில் இருந்த இந்த குடிமகன்கள், நேற்றுக் கடை திறப்பதற்கு சில மணி நேரங்களுக்கு முன்பே கடை முன்பு வரிசையில் நிற்க ஆரம்பித்தனர். கடைகள் திறக்கப்பட்டதும் விற்பனை விறுவிறுப்பாக நடைபெற்றது. (ஜ-2)

## கனடாவில் வைரஸ் பாதிப்பு 60 ஆயிரத்தை நெருங்கியது

(ஒட்டாவா)

கனடாவில்கொரோனா வைரஸ் (கொவிட்-19) தொற்றால், பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 60 ஆயிரத்தை நெருங்குகிறது.

நேற்றைய நிலவரப்படி கனடாவில் பாதிக்கப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 59,474 ஆகும்.

அத்துடன், புதிதாக கொரோனா வைரஸ் தொற்றுக்கு இலக்காகி 2,760 பேர் பாதிக்கப்பட்டனர். மேலும், 116 பேர் உயிரிழந்தனர்.

இதற்கமைய, கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழந்தவர்களின் மொத்த எண்ணிக்கை, 3,682 ஆக உயர்வடைந்தது.

அத்துடன், 30,884 பேர் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருவதோடு, 24,908 பேர் பூரண குணமடைந்து வீடு திரும்பினர். (ஜ-2)

## அமெ.கடற்படை மாலுமிகள் 100 பேருக்கு கொரோனா

(வோஷிங்டன்)

அமெரிக்காவில் கடற்படையின் போர்க்கப்பலில் 100 மாலுமிகளுக்கு கொரோனா வைரஸ் தொற்றுநோய் தாக்கி இருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

அமெரிக்காவில் கடற்படையின் 'யு.எஸ்.எஸ்.கிட்' போர்க்கப்பலில் ஏறத்தாழ 100 மாலுமிகளுக்கு கொரோனா வைரஸ் தொற்றுநோய் தாக்கி இருப்பதாக அங்கு ஊடக தகவல்கள் வெளியாகியுள்ளன.

கடந்த வியாழக்கிழமையன்று அமெரிக்கக் கடற்படை வெளியிட்ட ஒரு அறிக்கையில், யு.எஸ்.எஸ்.கிட் போர்க்கப்பலில் 78 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று இருப்பதாக தெரிவிக்கப்பட்டிருந்தது.

ஏற்கனவே அமெரிக்காவின் யு.எஸ்.எஸ்.தியோடர் ரூஸ்வெல்ட் விமானம்தாங்கி போர்க்கப்பலில் 1,100 இற்கும் மேற்பட்டோருக்கு கொரோனா வைரஸ் தாக்கியமை குறிப்பிடத்தக்கது. (ஜ-2)

## பொலிஸாரின் அதிரடித்தாக்குதலில் 18 பயங்கரவாதிகள் உயிரிழப்பு!

(கெய்ரோ)

எகிப்து நாட்டில் பொலிஸார் நடத்திய அதிரடித் தாக்குதலில் 18 பயங்கரவாதிகள் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

ஆபிரிக்க நாடுகளான எகிப்து நாட்டில் போகோஹராம், அல் கொய்தா, ஐ.எஸ்.போன்ற பயங்கரவாதக் குழுக்கள் ஆதிக்கம் செலுத்தி வருகின்றன. இந்தப் பயங்கரவாத குழுக்கள் அவ்வப்போது பொதுமக்களை குறிவைத்து தாக்குதல்களை அரங்கேற்றி வருகின்றன.

இந்தப் பயங்கரவாதக் குழுக்களை ஒழிக்கும் நடவடிக்கையில் பொலிஸாரும் இராணுவத்தினரும் ஈடுபட்டு வருகின்றனர். இதனால் பாதுகாப்புப் படையினருக்கும் பயங்கரவாதக் குழுக்களுக்கும் இடையே மோதல் சம்பவங்கள் நடைபெற்றுவருகின்றன.

இந்நிலையில்., அந்நாட்டின் சினாய் மாகாணம் பிர் எல் அப்ட் நகரில் பயங்கரவாதிகள் மறைந்திருப்பதாக பொலிஸாருக்கு தகவல் கிடைத்தது.

இதையடுத்து அப்பகுதிக்கு விரைந்து சென்ற பொலிஸார் அதிரடி தேடுதல் வேட்டை நடத்தினர். இந்தத் தேடுதல் வேட்டையில் 18 பயங்கரவாதிகள் கொல்லப்பட்டனர். (ஜ-2)

## கொரோனா...

ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இவர் ஹோமாகம வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் உயிரிழந்துள்ளார். இதனால் நாட்டில் கொரோனா தொற்றினால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 8 ஆக உயர்வடைந்துள்ளது.

உயிரிழந்த பெண் கடற்படை சிப்பாய் ஒருவரின் நெருங்கிய உறவினர் என தெரிவிக்கப்படுவதுடன் குறித்த பெண்ணுக்கு கடற்படை சிப்பாயின் ஊடாகவே இந்த தொற்று ஏற்பட்டிருக்கலாம் என சந்தேகம் வெளியிடப்படுகின்றது.

இந்தப் பெண் சிறுநீரக தொற்றினால் ஏற்கனவே பாதிக்கப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இலங்கையில் கொரோனா தொற்றினால் உயிரிழந்த முதலாவது பெண்ணாக இவராவார். (ம-3)

## வவுனியா பம்...

கொரோனா தொற்றுநோய் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

இந்நிலையில் குறித்த முகாமில் கடமையாற்றிய கடற்படை வீரர்கள் மற்றும் அவர்களது உறவினர்கள் தனிமைப்படுத்தும் நடவடிக்கைக்கு உள்ளாக்கப்பட்டு வருகின்றனர்.

வவுனியா பம்பைமடுவில் அமைந்துள்ள குறித்த முகாமிற்கு கடற்படை உத்தியோகத்தர்கள் மற்றும் அவர்களது உறவினர்கள் என 216 பேர் அண்மையில் கொண்டுவரப்பட்டு தனிமைப்படுத்தும் நடவடிக்கைக்கு உள்ளாக்கப்பட்டிருந்தனர்.

இந்நிலையில் அங்கு தங்க வைக்கப்பட்டிப்பவர்களிற்கான பி.சி.ஆர் பரிசோதனைகள் முன்னெடுக்கபட்டு வருகின்றது.

குறித்த பரிசோதனையில் செவனகலவைச் சேர்ந்த வெலிசரை கடற்படை வீரர் ஒருவரின் தந்தையாருக்கு கொரோனா தொற்றிருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. (ம-3,250,299)

## பொதுத் தேர்...

பட்டுக்கொண்டிருந்த, மார்ச் 17, 18, 19ஆம் திகதிகளை, பொது நிர்வாக அமைச்சு, விசேட விடுமுறை நாட்களாக அறிவித்திருந்தது.

இதனால், குறித்த மூன்று தினங்களிலும் பெறப்பட்ட வேட்புமனுக்கள் செல்லுபடியானதா என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

இது குறித்து தேர்தல்கள் ஆணைக்குழு, சட்டமா அதிபரிடம் ஆலோசனை கோரியிருந்தது. இதற்கமையவே, சட்டமா அதிபரால் இந்த ஆலோசனை வழங்கப்பட்டுள்ள தாகவும், சட்டமா அதிபரின் இணைப்புச் செயலாளர் தெரிவித்துள்ளார். (ம-3)

## அலரிமாளிகை விருந்தில் கூட்டமைப்பு பங்கேற்பு...

பிரதம அமைச்சர் மற்றும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கிடையிலான சந்திப்பு நேற்று அலரி மாளிகையில் இடம்பெற்றது.

கோவிட் - 19 வைரஸ் நிலைமைக்கு ஏற்புடைய நிதி ரீதியான வெளிநாட்டு உதவிகள் எதுவும் நமது நாட்டிற்குக் கிடைக்கப்பெறவில்லை என பிரதம அமைச்சர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

நேற்று அலரி மாளிகையில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களின் பங்கேற்புடன் இடம்பெற்ற கலந்துரையாடலில் கலந்துக்கொண்டபோது பிரதமர் இவ்வாறு தெரிவித்தார்.

கொரோனா வைரஸ் தொற்றுடைய முதலாவது நோயாளி கண்டறியப்பட்டது முதல் வைரஸைத் தடுப்பதற்கு அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பாகவும், நோயினைக் கட்டுப்படுத்துவதற்காக முன்னெடுத்துச் செல்லப்படும் தனிமைப்படுத்தல் வேலைத்திட்டம் தொடர்பாகவும் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மற்றும் உளவுப் பிரிவினரால் இதன்போது முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது.

வெளிநாட்டு உதவிகள் கிடைப்பது மற்றும் அவற்றை செலவிடுவது தொடர்பாக எதிர்க்கட்சியினரால் பல்வேறுபட்ட குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுவதால், அது தொடர்பாக முறையான தெளிவுபடுத்தல் அவசியமாகும் என இதன்போது முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் மகிந்தானந்த அளுத்கமகே குறிப்பிட்டார்.

உலக வங்கி தற்போதைய அனர்த்த நிலைமை காரணமாக 127 மில்லியன் அமெரிக்க டொலர் உதவியை வழங்க இணங்கி, அதற்கு ஏற்புடைய ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டுள்ள போதிலும், இதுவரை அந்த நிதி நமது நாட்டிற்கு கிடைக்கவில்லை எனவும், ஏற்புடைய நிதி எதிர்காலத்தில் கிடைக்கவுள்ளது எனவும் இதன்போது நிதியமைச்சின் செயலாளர் குறிப்பிட்டார்.

சுகாதார அமைச்சு மற்றும் கோவிட் தொடர்பான செலவினங்களை ஈடு செய்வதற்கு அந்த நிதி கிடைப்பதாகவும், இதற்கு மேலதிகமாக பொருள் ரீதியான வெளிநாட்டு உதவிகள் சுகாதார அமைச்சுக்கு கிடைத்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அத்துடன், வடக்கு கிழக்கில் வாழும் பெரும்பாலானோர் நாளாந்த வருமானத்தைப் பெறுவோர் என்பதால், அவர்களுக்கு அரசாங்கத்தினால் வழங்கப்படும் நிவாரணப் பணத்தை அதிகரிக்குமாறு அவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

கொழும்பு உள்ளிட்ட நகரங்களில் உள்ள 53ஆயிரம் பேர் இனங்காணப்பட்டுள்ளதாகவும், படிப்படியாக அவர்களைத் தங்களது ஊர்களுக்கு அனுப்பி வைக்கும் வேலைத்திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் இதன்போது பொலிஸ் மா அதிபர் குறிப்பிட்டார்.

இதில் கலந்துக்கொண்ட தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் அவர்களினால் முன்மொழிவுத் திட்டமொன்று பிரதமரிடம் கையளிக்கப்பட்டது.

கோவிட் - 19 வைரஸ் நிலைமையைக் கட்டுப்படுத்தல் மற்றும் மக்கள் வாழ்வினை இயல்பு நிலைக்கு மாற்றுவது தொடர்பாக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களின் பல கருத்துக்கள் மற்றும் முன் மொழிவுகள் இதன் போது சமர்ப்பிக்கப்பட்டதுடன், முன் வைக்கப்பட்ட முன் மொழிவுகள் மற்றும் கருத்துக்களைக் கலந்துரையாடி பொருத்தமான முன்மொழிவுகளை எதிர்காலத்தில் செயற்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்வதாக கலந்துரையாடலின் இறுதியில் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார். (ம-3)

## மேலும் 33 பேர் அடையாளம்...

கிழமை அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு அறிவித்துள்ளது.

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை 751ஆக (ஜனவரியில் பாதிக்கப்பட்ட சீனப் பெண் உட்பட) அதிகரித்துள்ளது.

அத்துடன், கொரோனா தொற்றால் பாதித்த மேலும் 10 பேர் முழுமையாகக் குணமடைந்து வைத்தியசாலைகளிலிருந்து வீடு திரும்பியுள்ளனர். இதுவரை 194 பேர் முழுமையாகக் குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர். 8 பேர் உயிரிழந்துள்ளனர். 549 பேர் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். (ம-3)

## பாராளுமன்றத்தை கூட்டா...

பாராளுமன்றத்தின் ஒப்புதல் இல்லாமல் அரசாங்கம் ஒரு சர்வாதிகாரமாக நிதியை செலவழிக்கிறது. இத்தகைய நடவடிக்கை நாட்டிற்கு சாதகமற்ற பிம்பத்தை உருவாக்கும் என அவர் சுட்டிக் காட்டினார்.

பாராளுமன்றம் கூட்டப்பட்டால் சட்ட சிக்கல்கள் தீர்க்கப்படலாம், குறிப்பாக அவசரகால சட்டம் மூலம் ஊரடங்கு உத்தரவை சட்டப்பூர்வமாக்குவது, தொற்று நோய்கள் தொடர்பான புதிய சட்டங்களை கொண்டுவருவது மற்றும் தேர்தல் சட்டத்தில் திருத்தங்களை கொண்டு வருவது போன்ற இந்த முயற்சிகளில் அரசாங்கத்திற்கு ஆதரவு வழங்குவதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம் என கூறினார்.

இதனை விடுத்து நேற்று அலரி மாளிகையில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அழைப்பு விடுத்து கலந்துரையாடலில் ஈடுபடுவதனால் எவ்வித நன்மையும் ஏற்படப்போவதில்லை என்றும் அவர் குறிப்பிட்டார். (ம-3)

## ஓய்வூதியம் மற்றும் கொடுப்...

ஓய்வூதியர்கள், முதியோர், சிறப்புத் தேவையுடையோர் மற்றும் நீரிழிவு நோயாளர்களுக்கான கொடுப்பனவுகளை வழங்க 24 பில்லியன் ரூபாய் நிதி நேற்று விடுவிக்கப்பட்டுள்ளது என்று நிதி அமைச்சுக் குறிப்பிட்டுள்ளது.

அனைத்து ஓய்வுபெற்ற அரச ஊழியர்களுக்குமான ஓய்வூதிய கொடுப்பனவை ஒவ்வொரு மாதமும் 10ஆம் திகதிக்கு முன்னர் வழங்க அரசு நடவடிக்கை எடுத்திருந்தது.

எனினும், வெசாக் போயா தினம் மற்றும் வார இறுதி விடுமுறை ஆகியன எதிர்வரும் நாட்களில் காணப்படுவதன் காரணமாக மே மாதத்துக்கான ஓய்வூதியக் கொடுப்பனவை முன்கூட்டியே வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மேலும், ஏப்ரல் மாத ஓய்வூதியத்தைப் பெற்றுக்கொள்ள அரசு வழங்கிய சலுகைகள் இந்த மாதமும் வழங்கப்படவுள்ளன என்று நிதி அமைச்சு தெரிவித்துள்ளது. (ம-3)

## யாழிலுள்ள குடும்பத்தை பார்...

செல்லத்துரை அன்டனி (வயது 60) என்பவரே உயிரிழந்தவராவார்.

இச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது.

யாழ்ப்பாணம் அளவெட்டியில் வசித்து வரும் குறித்த குடும்பத்தலைவர் கிளிநொச்சி நகரத்தில் உள்ள தனது சகோதரி வீட்டிற்கு அண்மையில் சென்றுள்ளார்.

நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலை காரணமாக மாவட்டம் விட்டு மாவட்டம் வர முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

இதனால் நீண்ட நாட்களாக தனது மனைவி மற்றும் நான்கு பிள்ளைகள் ஆகியோரை பார்க்க முடியாத விரக்தியில் இருந்துள்ளார்.

இந்நிலையில் நேற்று திடீரென தனது சகோதரியின் வீட்டிற்கு முன்னால் உள்ள வெற்றுக் காணிக்குள் தனக்குத்தானே மண்ணெண்ணெய் ஊற்றி தீ மூட்டியுள்ளார்.

இதனை அவதானித்த அயலவர்கள் உடனடியாக அவரை மீட்டு முழங்காவில் மருத்துவமனையில் அனுமதித்துள்ளனர். பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த நிலையில் நேற்று இரவு சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இந்த இறப்பு தொடர்பான விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (ம-3)

## எதிர்வரும் திங்கள் முதலே நடை...

நேற்று இடம்பெற்ற விசேட ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

தேசிய அடையாள அட்டையின் இறுதி இலக்கத்தை பயன்படுத்தி வெளியில் செல்லும் திட்டமானது ஊரடங்குச் சட்டம் அமுலில் உள்ள பிரதேசங்களில் மாத்திரமே நடைமுறையில் இருக்குமென ஜனாதிபதி ஊடகப்பிரிவு நேற்று முன்தினம் அறிவித்திருந்தது.

மக்கள் அநாவசியமாக ஒன்றுகூடுவதை கட்டுப்படுத்துவதற்காக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள தேசிய அடையாள அட்டையின் இறுதி இலக்கத்திற்கு ஏற்ப வீடுகளில் இருந்து வெளிச்செல்வதற்கு வழங்கப்படும் அனுமதி ஊரடங்கு சட்டம் அமுலில் உள்ள பிரதேசங்களுக்கு மட்டுமே ஏற்புடையதாகும் என அறியத்தரப்படுகின்றது.

ஊரடங்கு சட்டம் தளர்த்தப்பட்டுள்ள சந்தர்ப்பங்களில் வீடுகளில் இருந்து வெளிச்செல்வதற்கு இது எந்தவகையிலும் ஏற்புடையதல்ல. ஏதேனும் ஒரு பிரதேசம் அல்லது கிராமம் இடர் வலயமாக குறிப்பிடப்பட்டிருந்தால் அத்தகைய வலயங்களுக்குள் பிரவேசிக்கவோ அல்லது அங்கிருந்து வெளிச்செல்லவோ எவருக்கும் அனுமதி வழங்கப்படமாட்டாது.

கொழும்பு, கம்பஹா, புத்தளம் மற்றும் களுத்துறை மாவட்டங்களில் உள்ளோர் இவ்வாறு தேசிய அடையாள அட்டையின் இறுதி இலக்கத்தை பயன்படுத்தி தமது அத்தியாவசிய தேவைகளை நிறைவேற்றிக்கொள்ள முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

ஏனைய மாவட்டங்களில் உள்ளோர் ஊரடங்கு அமுலில் இல்லாத நேரத்தில் தேசிய அடையாள அட்டை நடைமுறையை பின்பற்ற வேண்டிய அவசியம் இல்லை என தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

## கொரோனா நெருக்கடியை கருத்...

படும் வாய்ப்பிருப்பதாகவும் கூறினார்.

சிறந்த ஆட்சியாளன் என ஆட்சிக்கு வந்த ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு பின்னாலும் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவின் முன்னைய ஆட்சிகாலத்தில் கைகோர்த்திருந்த மோசடிக்காரர்களை இணைத்துக் கொண்டுள்ளதாகவும், மீண்டும் அதே மோசடியான ஆட்சியே மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் குறிப்பிட்டார்.

எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் நேற்று திங்கட்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனை தெரிவித்த அவர் மேலும் கூறியதாவது.

கொரோனா வைரஸ் பரவல் தொடர்பில் உலகளாவிய ரீதியில் பெரும் நெருக்கடி நிலைமை ஏற்பட்டிருந்ததை அறிந்திருந்தும் அரசாங்கம் உரிய நேரத்தில் உரிய முறையில் செயற்படாமையினால் இன்று முழு நாடும் பெரும் நெருக்கடி நிலைமையை எதிர் நோக்கி வருகின்றது.

வைரஸ் பரவலை கட்டுப்படுத்துவதற்காக ஊரடங்கை அமுல்படுத்திவிட்டு அரசாங்கம் உண்மை தகவல்களை மறைத்து வருகின்றது. இந்த காலப்பகுதிகளில் அரசாங்கம் அதற்கு சார்பான பிரசாரங்களை மேற்கொண்டு விட்டு, வைரஸ் பரவல் உட்பட அரசாங்கத்தின் நிலைப்பாடு தொடர்பாக உண்மைக்கு புறம்பான தகவல்களை வெளியிடுவதாகவே எமக்கு தோன்றுகின்றது.

வைத்திய நிபுணர்களின் ஆலோசனைக்கமைய வைரஸ் பரவலை கட்டுப்படுத்துவதற்கான முயற்சிகள் ஒழுங்கான முறையில் மேற்கொள்ளப்படுகின்றதா? அப்படி மேற்கொள்ளப்பட்டால் கடற்படையினருக்கு எவ்வாறு வைரஸ் தொற்று ஏற்பட்டது. சில உயிரிழப்புகள் கொரோனா தொற்றினால் ஏற்படவில்லை என்று தெரிவித்துள்ள போதிலும், அந்த சடலங்களை கொரோனா தொற்றுக்குள்ளாகி உயிரிழப்பவர்களின் சடலங்களை தகனம் செய்யும் முறையிலேயே தகனம் செய்துள்ளனர். இது பெரும் சந்தேகத்தை தோற்றுவித்துள்ளது.

ஊரடங்கு அமுலில் உள்ள காலத்தில் பத்திரிகைகள் மற்றும் சமூகவலைத்தளங்கள் சில செயற்படாமல் இருக்கின்றன. இதனால் உண்மை தகவல்கள் எதுவும் வெளிவருவதற்கான வாய்ப்பும் குறைவு.


இதேவேளை இந்தக் காலப்பகுதியில் 80 இலட்சத்திற்கும் அதிகமான குடும்பங்கள் தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளதா? இவர்களுக்கான வருமானம் தொடர்பில் எந்த நடவடிக்கையாவது மேற்கொண்டுள்ளதா? 5 ஆயிரம் ரூபாய் பணமும் 45 நாட்கள் கடந்துள்ள நிலையில் இன்னும் முழுமையாக பகிர்ந்தளிக்கப்படவில்லை. இவை தொடர்பில் அக்கறை செலுத்தாமல், எதிர்க்கட்சிகள் பாராளுமன்றத்தை கூட்டுமாறு அறிவித்து வருகின்ற போதிலும் அதனை செய்யாது, அலரி மாளிகைக்கு பாராளுமன்ற உறுப்பினர்களை அழைத்து விருந்து வழங்குவதால் வைரஸ் பரவலை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரமுடியுமா?

பாராளுமன்றத்தின் ஆயுட்காலம் முடிவடைவதற்கு இன்னும் 6 மாதகாலம் இருக்கும் நிலையில், வைரஸ் தொடர்பில் பெரும் அச்சுறுத்தல் நிலைமை தோற்றம் பெற்றிருந்த தருணத்தில் பாராளுமன்றத்தை கலைத்து, இந்த நெருக்கடியின் மத்தியில் தேர்தலை நடத்த முயற்சிப்பதானது மரணத்தின் வாயிலை திறப்பதற்கு இணையாகும் என்றார். (ம-3)

## அரச வேலையே அபிமானம் மிகுந்தது என்று எண்ணாதீர்

# வேலை செய்யாமலே மாதாந்த சம்பளம் பெறுவது பற்றி கனவு காணாதீர்

## பட்டதாரிகளுக்கு நீதியரசர் விக்னேஸ்வரன் அறிவுரை



**(யாழ்ப்பாணம்) அரச வேலை ஒன்று மட்டுந்தான் அபிமானம் மிகுந்தது என்று நினைக்காதீர். வேலை செய்யாமலே மாதாந்த சம்பளம் பெறுவது பற்றி கனவு காணாதீர்.**

**இவ்வாறு வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரும் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவருமான நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.**

**வேலையில்லா பட்டதாரி ஒருவரால் கேட்கப்பட்ட கேள்வியின் அடிப்படையில் வாரம் ஒரு கேள்வி பதில் அறிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.**

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

**கேள்வி-** நாங்கள் வேலையில்லாப் பட்டதாரிகள். எமக்கு வேலை வேண்டும். கடந்த பல வருடங்களாக வேலைக்காக அலைகின்றோம். அரசாங்க ஆதரவு அரசியல்வாதிகள்தான் வேலை தருவதாகக் கூறுகின்றார்கள். தமிழ்த் தேசிய கூட்டமைப்புக்கு வாக்களித்தோம். என்ன பயன்? அவர்கள் தங்கள் பைகளை நிரப்பிக் கொண்டார்கள். சிங்களவருக்கும் முஸ்லிம்களுக்கும் வேற்று மாகாணத் தமிழருக்கும் வேலை வாங்கிக் கொடுத்தார்கள். எங்களுக்கு? அதனால்தான் நாங்கள் அரசாங்கம் சார்பானவர்களுக்கு வாக்களிக்க உத்தேசித்துள்ளோம். எனினும் எமக்கு வேலை கிடைக்க வைக்கலாம் என்று உங்களால நிச்சயமாகக் கூற முடியுமா?

**பதில் -** பட்டதாரிகளையும் சேர்த்து ஏறத்தாழ இரண்டு லட்சம் இளையோர்கள் வடக்கு - கிழக்கில் வேலை இல்லாமல் இருக்கின்றார்கள். சிங்கள கட்சிகளை பிரதிநிதித்துவப்படுத்தும் வேட்பாளர்களை நீங்கள் தெரிவு செய்தால் எத்தனை பேருக்கு வேலை கிடைக்கும்? சாதாரணமாக நடைபெறும் ஆட்சேர்ப்பு உள்ளடங்கலாக சில நூறு பேர்களுக்கு மட்டுந்தான் இவர்களால் வேலை பெற்றுக் கொடுக்க முடியும். அதுவும் சிங்கள அரசுக்கு "சலாம்" போட்டு இளித்து கேட்டுக் கொண்டால்தான் கிடைக்கும். அவர்கள் இங்கு செய்யும் அயோக்கியத்தனாங்களையும் பொறுத்துக் கொள்ள வேண்டும்.

பௌத்த கோவில் திறந்தால் அங்கு போய்ப் பாராட்ட வேண்டும். மணல் கள்ளமாக பிற மாவட்டங்களுக்குச் சென்றால் கண்டும் காணாதது போல் இருக்க வேண்டும். சாதாரணமாக நடைபெறும் ஆட்சேர்ப்புக்களைக் கூட சிங்கள கட்சிகள் தமது பிரதிநிதிகளுக்கு ஊடாக வழங்கி ஒரு மாயத் தோற்றத்தை ஏற்படுத்தி வருகின்றார்கள். ஏதோ வெட்டிப் பிடுங்கியுள்ளதாகப் பிதற்றுகின்றார்கள்.

ஆகவே, சிங்களக் கட்சிகளை பிரதிநிதித்துவப்படுத்தும் வேட்பாளர்களைத் தெரிவு செய்வதால் எமது மக்களின் வேலை இல்லாப் பிரச்சினைக்கு தீர்வு கிடைத்துவிடும் என்று நீங்கள் நினைக்கின்றீர்களா? தமிழ் மக்களை பொருளாதார ரீதியாக வலுப்பெறாமல் வைத்திருப்பதற்கான சிங்கள அரசின் உத்திகளில் எமது மக்களுக்கு வேலை வாய்ப்புக்களை வழங்காமல் இருப்பது ஒன்று. இதனைச் சுதந்திரம் கிடைத்த நாள் முதல் அரசுகள் செய்து வருகின்றன. இனப் பிரச்சினைக்கான காரணங்களில் இதுவும் ஒன்று. வழங்குவதானால்எமதுமக்களைத் தமது அடிவருடிகளாக்கியே வழங்குகின்றார்கள்.

ஆகவே, சிங்களக் கட்சிகளை பிரதிநிதித்துவப்படுத்தும் ஒரு சிலரை தமிழ் மக்கள் தெரிவு செய்துவிட்டால் எமது வேலை இல்லாப் பிரச்சினைக்கு தீர்வு காணப்பட்டுவிடும் என்று நினைப்பது மகா முட்டாள்தனம். அந்த அரசியல்வாதிகளின் கையாட்கள் சிலர் ஒருவேளை பயன் பெறக்கூடும். ஆனால் அதுகூட நிரந்தரமாகுமா என்பது இன்னொரு கேள்வி. எனது பொலிஸ் பாதுக்காவலரின் மகனுக்கு தெற்கில் முன்னைய அரசின் கீழ் வேலை வழங்கப்பட்டது. புதிய அரசு அவரின் நியமனத்தைத் தற்போது இரத்துச் செய்துவிட்டது.

மத்திய அரசுகளின் கடந்த கால அணுகுமுறைகளைப் பாருங்கள்! கடந்த 5 வருடங்களாக ஒட்டுமொத்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களும் நல்லாட்சி அரசின் பாதுகாவலர்களாகவும் அரசின் பகுதியாகவுமே செயற்பட்டு வந்திருந்தார்கள். ஆனால் வேலை இல்லாப் பிரச்சினைக்குத் தீர்வு காண முடிந்ததா? எத்தனை பேருக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினால் வேலை எடுத்துக் கொடுக்க முடிந்தது?

சில நூறு பேர்களை வேண்டுமானால் விரல் விட்டு எண்ணலாம். எனது முதலமைச்சர் காலத்தில் நாம் வேலை எடுத்துக் கொடுத்த தொகையினரிலும் குறைந்த தொகையினருக்கே அவர்கள் வேலை பெற்றுக் கொடுத்தார்கள். அத்துடன் வடக்கு - கிழக்கின் பல வெற்றிடங்களுக்கு தென் இலங்கை மக்களே அவர்கள் பதவியிலே இருக்கும்போதே நியமனம் பெற்றிருந்தார்கள். இதனைக கூடக் கூட்டமைப்பினால் தடுக்க முடியவில்லை. பல்லிளித்துப் பதவி பெறுவதில் இருக்கும் அதிகாரமற்ற தன்மை உங்களுக்கு புரிந்திருக்கும்.

எமது மக்களின் தன்னாட்சி, தற்சார்பு, தன்னிறைவு ஆகியன பற்றி வலியுறுத்துவதை விட்டுவிட்டு அரசுக்கு ஆதரவு கொடுத்து அவர்களின் ஒரு பகுதியாக நான் செயற்பட்டால் இங்குள்ள சிங்களக் கட்சிகளின் பிரதிநிதிகளை விட இன்னுஞ் சற்றுக் கூடுதலானவர்களுக்கு என்னால் வேலை எடுத்து கொடுக்க முடியும். அதனுடன் எம் தமிழ் மக்களின் பிரச்சினைகள் தீர்ந்துவிடும் என்று நீங்கள் நம்புகின்றீர்களா? இவ்விடயத்தைச் சுயநலத்துடன் பார்க்காதீர். அரச வேலை ஒன்று மட்டுந்தான் அபிமானம் மிகுந்தது என்று நினைக்காதீர். வேலை செய்யாமலே மாதாந்த சம்பளம் பெறுவது பற்றி கனவு காணாதீர்.

ஆகவே வேலையில்லாப் பிரச்சினை மட்டுமல்ல. எமது மக்கள் இன்று எதிர்கொள்ளும் எல்லாப் பிரச்சினைகளுக்கும் நிரந்தரமான தீர்வு காண்பதற்கு இருக்கும் ஒரே வழி வடக்கு கிழக்கில் எம்மை நாமே ஆளும் அதிகாரத்தைப் பெற்றுக் கொள்வதுதான். எமக்குள் முரண்பாடுகள் வலுக்குமே என்று நீங்கள் கூறலாம். அந்த முரண்பாடுகள் மத்தியின் அதிகார பலத்தினால் உண்டாக்கப்பட்டவை. மக்களாகிய நாம் வலுப்பெற அவை அடங்கிவிடும்.

தற்போது மாற்றாரை நம்பியே எமது வேலையில்லாத் திண்டாட்டத் தீர்வு இருக்கின்றது. அதனால்த்தான் சமஷ்டித் தீர்வை வலியுறுத்தி நாம் உங்களிடம் வாக்குக் கேட்கின்றோம். நீங்கள் நினைப்பது போல வேலையில்லா நில்லையைப் போக்குவது தற்போதைய சூழலில் இலகுவான ஒன்று அல்ல. அது ஒரு இன முரண்பாட்டின் நீண்ட வட்டத்துக்குள் உட்பட்ட ஒன்று. எமது இந்த இன முரண்பாடு ஏற்கெனவே நீண்ட தூரம் கடந்து விட்டிருக்கின்றது.

ஆகவே நாங்கள் சிறந்த உபாயங்களைக் கையாண்டு, எமது புத்தியைப் பயன்படுத்திச் செயற்பட்டால் எமது உரிமைகளை விரைவில் பெறுவதற்கான வழிகள் உள்ளன. ஆனால் கால வரையறையை விதிப்பது சிரமம். எம் மீது நீங்கள் நம்பிக்கை வைக்க வேண்டும். இறைவன் மேல் உங்களுக்கு நம்பிக்கை பிறக்க வேண்டும்.

அரசில் தங்கி இருக்காமல் எமது பொருளாதாரத்தையும் வாழ்வையும் நாமே உருவாக்கிக் கொள்ள வேண்டும் என்றே நாங்கள் நினைக்கின்றோம். பல வழிகள் எமக்கு இருக்கின்றன. எமது புலம்பெயர் மக்கள் இருக்கின்றார்கள். இன்று அநேகமான நாடுகள் திறந்த பொருளாதார சந்தையில் சங்கமம் ஆகி இருக்கின்றன. எமது நாட்டின் மூன்றில் இரண்டு பகுதிகளிலும் அதிக வேலைவாய்ப்பு தனியார் துறையிலும் சுய தொழிலிலுமே ஏற்பட்டுள்ளன.

இந்த வாய்ப்புக்களை எல்லாம் நாம் முயற்சி செய்து பார்க்காமல், சில நூறு பேர்களுக்கு அரச வேலையைப் பெற்றுக்கொள்வதற்காக எமது உரிமைகளை எல்லாம் கைவிட்டுவிட்டு சிங்கள கட்சிகளின் பிரதிநிதிகளுக்கு அல்லது அக்கட்சிகளின் அடிவருடிகளுக்கு வாக்கு போட வேண்டும் என்று நீங்கள் நினைக்கின்றீர்களா?

நாம் வட மாகாண சபையில் இருந்தபோது தகைமைக்கு இடம் கொடுத்து பாதிக்கப்பட்ட மக்களின் நிலை அறிந்து பதவிகளைப் பெற்றுக் கொடுத்திருந்தோம்.

எமது அரசு சார்பு அரசியல்வாதிகள் நாங்கள் அவர்களுக்கு வாக்குப் போட்டால்தான் அவர்கள் வேலைகள் தருவார்களாம். இதைத்தானே அன்றும் இன்றும் சொல்லி உங்களை ஏமாற்றிப் பிழைத்து வந்துள்ளார்கள். தம்மையும் வளர்த்து வந்துள்ளார்கள். பொய் வார்த்தைகள் பேசி உங்களை நாங்கள் ஏமாற்ற விரும்பவில்லை. ஆனால் வேலையில்லாப் பிரச்சினைக்கு எமது உள்ளூர்த் தீர்வுகள் பலவுண்டு என்பதை மறந்து விடாதீர்கள்.

எமது அரசியல் தலைமைகள் இதுகாறும் எதையுமே செய்யவில்லை என்று நீங்கள் கருதக்கூடாது. அது உண்மை அல்ல. 30 வருடங்கள் போர் நடைபெற்றபோது, எமது மக்களின் வாழ்க்கை தன்னாட்சி, தற்சார்பு, தன்னிறைவுக்கு உட்பட்டதாகவே இருந்தது. இது வரலாற்று உண்மை. எமது மக்கள் மத்தியில் இருந்துதான் அத்தகைய செயல் வீரர்கள் உருவாகி இருந்தார்கள். ஆனால், போர் முடிவடைந்து கடந்த 10 வருடங்களுக்குள் எமக்குத் தெளிவு இல்லாமல் போய்விட்டது. எமது குறிக்கோள்களை மறந்துவிட்டோம். இதற்குப் பல காரணங்கள் இருக்கின்றன. ஆனால், எமது பிழைகளில் இருந்தும், அனுபவங்களில் இருந்தும் நாம் பாடம் கற்றுக் கொண்டிருக்கின்றோம்.

உதாரணத்துக்கு சம்பந்தன், 2016ல் தீர்வு என்றார். 2017ல் 2018ல் ஏன் 2019ல் தீர்வு என்று கூறினார். அவர் அவ்வாறு நம்பியே அது பற்றி அப்படிக் கூறினார். இப்பொழுது அவர் கூட தமது நம்பிக்கை வீண் போய்விட்டது என்று கருதுகின்றார். ஆகவே அவரின் அனுபவம் எமக்குப் பாடமாக அமைகின்றது. அவர் நம்பிக் கெட்டுள்ளார். மீண்டும் நீங்கள் கூறுவது போல எம்மை நம்பிக் கெடுமாறு கூறுகின்றீர்களா?

ஆகவே நாம் மீண்டும் எழுவோம் என்று நம்பிக்கை கொள்ளுங்கள். ஒன்றுபடுங்கள். சலுகைகள் வேண்டாம். எமக்கு எமது உரிமையே வேண்டும் என்று சிந்தியுங்கள். அந்த சிந்தனையின் வ்ழி நடக்க முன்வாருங்கள். உங்கள் உரிமைகள் விரைவில் கிடைப்பதாக! வேலைகளும் கிட்டுவதாக! என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-3)


**CHEMISTRY & PHYSICS**

**Personal Classes**

- General Chemistry
- Inorganic chemistry
- Organic Chemistry
- Physical Chemistry & Industrial Chemistry
- Past Papers

அனைத்தும் குறுகிய காலத்தில் பூரணமாக கற்க முடியும்

தொடர்புகளுக்கு (2691)

**076 168 4391**



**பணிப் பெண் தேவை**

உரும்பிராயில் உள்ள சிறிய குடும்பம் ஒன்றுக்கு தங்கி நின்று வேலை செய்வதற்கு பணிப் பெண் தேவை.

தொடர்புகளுக்கு (2690)

**077 609 5604**


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 05.05.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.